58

1158

# இஸ்லாத்தில் ஸ்திரீகளின் உன்னதம்

OFFICE OF THE REGISTR...
2- DEC 1933
MADR...

ஆக்கியோன்:
S. புருஹானு-த்-தீன்.

பிரசுரிப்பவர்:
...முஹம்மது எஹ்யா சாஹிது,
...னரல் மர்ச்சண்ட்,
...ங்கலம் (தஞ்சாவூர் ஜில்லா)

ON (Y15)
N33
77147

# பெண் ரத்னங்களைப்பற்றி இஸ்லாத்தின் திருத்தூதரவர்கள் கூறிய திருமொழிகள்

1. ஸ்திரீகள் புருஷர்களின் இரட்டைப் பிறவியா யிருக்கிறார்கள்.

2. ஸ்திரீகளை நல்லவிதமாக நடத்துமாறு ஆண்டவன் உங்களுக்கு ஆணையிட்டிருக்கிறான். ஏனெனின், அவர்கள் உங்களுடைய தாய்மார்களாகவும் குமாரிகளாகவும் சிற் றன்னைமார்களாகவு மிருக்கிறார்கள்.

3. பெண்களின் பாத்யதையானது மகா பரிசுத்த முடையதா யிருக்கிறது. ஆதலின், அவர்களுக்குறிய பாத் யதையானது பாதிக்கப்படாம லிருக்கும்படியான வழியில் நடந்து கொள்ளுங்கள்.

4. தன்னுடைய தாய் தந்தையருக்கு மரியாதை செய்து அவர்கள்மீது பக்ஷமும் பிரியமும் பாராட்டி பார்க்கக் கூடிய ஒவ்வொரு குழந்தைக்கும் அப்படிப்பட்ட ஒவ்வொரு பார்வைக்கும் ஆண்டவன் மறு உலகயாத்திரைக்குரிய அதிக மான நன்மையே கொடுப்பான்.

5. ஒரு மனிதனுடைய புதையல்களுக்குள் ளெல் லாம் மகா சிரேஷ்டமானது ஒரு சன்மார்க்க ஒழுக்கமுள்ள மனைவிதான்.

6. உங்களுள் எவர் தம்முடைய மனைவியரிடம் மிக நேர்த்தியாய் நடந்து கொள்கிறாரோ அவரே மகா சிலாக்ய மானவர்.

# இஸ்லாத்தில் ஸ்திரீகளின் உன்னதம்

ஆக்கியோன்:

S. புருஹானு-த்-தீன்.

OFFICE OF THE REGISTRAR OF
2-DEC 1933
MADRAS

பிரசுரிப்பவர்:

V. A. S. முஹம்மது எஹ்யா சாஹிது,

ஜெனரல் மர்ச்சண்ட்,

அடியக்கமங்கலம் (தஞ்சாவூர் ஜில்லா)

All Rights Reserved] 1933 [விலை அணா 3

77147

786
297

THE GUARDIAN PRESS LTD.
BROADWAY, MADRAS

OFFICE OF THE RE
2-DEC 193
MADI

# முகவுரை

இஸ்லாத்தால் மாதர்களுக்கு உயர்வளிக்கப்பட் டிருப்பதை ஒரு சிறு நூலாய் எழுதி வெளியிடல் வேண்டுமென எமது நேயர்களிற் சிலர் வேண்டியதற் கிணங்கவும், பிறமத பிரசாரகர் பிதற்றை அகற்றுவான் கருதியும், இந்நூலை வரையப் புகுந்தேன். எமது சிறிய ஆராய்ச்சியில் அறிந்தவைகளை மட்டில் ஆதாரமாய்க் கொண்டு எழுதி இருப்பதால், இது விஷயமாய் உலக நன்மைகளைக்கருதி வெளியிட வேண்டிய நுட்பமான விஷயங்கள்பல இன்னம் இருக்கின்றன. இந்நூலில் தோன்றும் வழுக்களைப் பெரியார் எடுத்துக் காட்டி என்னைத் திருத்தியும், க்ஷமித்தும், மேலும் இவ்வகைத் தொண்டில் யான் ஈடுபடுவதற்கு ஊக்கத்தையும், தந்தருளக் கோருகிறேன். எமது வேண்டுகோளிற் கிணங்க, இச்சிறிய நூலுக்கு மதிப்புரை தந்து எமது பணிக்கு ஊக்கந்தந்த, எமதாருயிர் பெரியார், சென்னை "தாருல் இஸ்லாம்," ஆசிரியர், மௌலானா பா. தாவூத்ஷா அவர்கட்கும் அன்பு கெழுமிய சோதரர் மௌலானா, பாவலர், சி. மீ. முஹம்மது யூசுப் ஸாஹிப் (ஆசிரியர், ஷம்ஸுல் ஹுதா) அவர்கட்கும் எமது மனப்பூர்வமான நன்றி உரியனவாகுக!

வஸ்ஸலாம்.

"பாவலர் வில்லா"
அடியற்கை மங்கலம்,
1—4—33.

தங்க ளன்பிற்குரிய,
S. புகுஹானுத்தீன்.

# மதிப்புரை.

அடியற்கைமங்கலம், ஜனுப், எஸ். புருஹானுத்தீன் அவர்களால் இயற்றப் பெற்றுள்ள "இஸ்லாத்தில் ஸ்திரீகளின் உன்னதம்" என்னுந் திருநாமந் தாங்கிய இவ் வரிய நூலைப் பார்வையிட்ட வரையில் இதன் பெயருக் கேற்ற முறையில் விஷயங்கள் நன்கு எடுத்துக் காட்டப்பெற் றிருக்கின்றன வென்றே கூறலாம். இந்நூலின்கண், முஸ்லிம் ஸ்திரீ களுக்குக் கிடைத்துள்ள, போற்றற்குரிய, பாத்தியதைகள் இனிது விளக்கப்பெற் றிருப்பதுடன், பற்பல நாடுகளில் ஏனைய ஸ்திரீகளின் நிலைமை எவ்வா றிருக்கின்றன வென்ப தையும் ஒருவாறு கூறியுள்ளதானது பாராட்டத் தக்கதே யாகும். இந் நூலைக்கொண்டு முஸ்லிம்கள் தங்கள் சமூகப் பெண்களுக்குக் கொடுக்கப் பெற்றுள்ள பாத்தியதைகளைச் செவ்வையாய் உணர்ந்து கொள்வது ஒருபுற மிருக்க; ஏனைய சமூகத்தினர்களும், முஸ்லிம் பெண்களின் உரிமைகளை நன்குணர்ந்து கொள்வார்க ளென்பது உறுதியாகும். இத ஞல், முஸ்லிம் பெண்மணிகளின் யதார்த்த உரிமைகளை உணராமற் குறைகூறிவருகின்ற சில பிறமதச் சகோதரர் களின் மனப்பான்மை திருந்து மென்பதிற் சந்தேக மில்லை.

மேலும், இந்த அவசியமான நூல் எளிய செந்தமிழ் நடையில் எழுதப் பெற்றிருப்பது மற்ஜெரு அழகாகும்.

இத்தகைய நூல்கள் பற்பல வெளியாக வேண்டுவது அவசிய மாகும். நமது தென்னுட்டுத் தமிழர்களைப் பொறுத்த வரை யில் முஸ்லிம் பெண்மணிகளின் உன்னதத்தை உணர்ந்து கொள்ளும் வண்ணம் வெளியிடப் பெற்ற இந்த நூல் வெகு நாட்களாக இருந்து வந்த ஒரு குறையை நிவர்த்தி செய்த தென்றே கூறுவோம். ஆதலின், இந்த அரிய நூலைப் பொது வாக முஸ்லிம்களும், சிறப்பாகத் தமிழ் நாட்டு மக்கள் அனை வரும் ஆதரித்து வாங்கிப் படித்து உண்மையான விஷயங்களை உணர்ந்து கொள்வது மிக மிக வேண்டற் பாலதெனத் தெரி வித்துக் கொள்கின்றோம்.

இங்ஙனம்,

மன்னார்குடி, 15—2—33 } பாவலர், சி. மீ. முஹம்மது யூசுப் ஸாஹிப், பத்திராதிபர், "ஷம்ஸுல் ஹுதா"

# ஆராய்ச்சியுரை.

ஜனுப் எஸ். புருஹானுத்தீன் எழுதிய இச்சிறுநூல் முழுதும் ஒரு முறை படித்துப்பார்த்தேன். நன்ருக வரையப் பெற்றுள்ளது. இதிலுள்ள மேற்கோள்களை யான் அசல் கிரந்தங்களுடன் ஒப்புநோக்க அவகாச மின்மையால் அது விஷயம் என்னுல் பரிசீலனை செய்யப்படவில்லை. பொதுவாக நோக்குமிடத்து, இதரமத சகோதரிகளுடன் நம் முஸ்லிம் சகோதரிகளின் நிலைமை ஒருவாறு ஒத்திட்டுக் காட்டப்பட்டு, இஸ்லாம் ஸ்திரீகளுக் களித்துள்ள உன்னதம் விளக்கப்பட் டிருக்கின்ற தென்னலாம். ஆயின், ஆசிரியரே கூறுவதற் கேற்ப, இதுவிஷயமாக வெளியிடவேண்டிய நுட்ப விஷயங் கள் இன்னம் பல இருக்கின்றன. எழுதியவரை ஆசிரியரது முயற்சி போற்றற் குரியதே; எனினும், இன்னம் சிறிது விரிவாக எழுதியிருந்தால் அதிக பயன்தரத் தக்கதா யிருந் திருக்கும். தமிழ்நடையும் இன்னம் சிறிது செம்பாகத்திலாகி யிருப்பது உத்தமமாம்; இது மறுபதிப்பில் செய்யப்படலா மென்பது எனது துணிபு. எனினும், செய்தவரை ஆசிரியர் பெரிதும் பாராட்டற் குரியரே யாவர். பொதுமக்களும் இச் சிறு நூலால் விளையப்போகும் நன்மையின் காரணத்தால் இன்னுருக்குக் கடமைப்பட்டவரே யாவர். எனவே, இவ் வாலிபரது இம் முதல்முயற்சிக்குத் தக்க ஊக்கத்தையளித்து, இதேபோன்ற இன்னம்பல இஸ்லாமிய நூல்கள் எழுத முன் வருமாறு பேராதரவும் புரிய வேண்டுவது நந்தமிழ் நாட்டு முஸ்லிம்களின் கடமையாகும். எல்லாம்வல்ல இறைவன் இவ்வாலிப ஆசிரியருக்கு என்றும் நல்லருள் புரிந்தருள் வானுக!

இங்ஙனம்:

தாருல் இஸ்லாம் ஆபீஸ்
சென்னை, 8—4—33.

பா. தாவூத்ஷா,

# இஸ்லாத்தில் ஸ்திரீகளின் உன்னதம்

உலகில் பொதுவாக எல்லா வகுப்பு ஜாதி மகளிரும் உலக ஆரம்பமுதல் பல்வித நிலைமையிலும் திகழ்ந்து வந்தனர்; இன்னும் திகழ்ந்து வருகின்றனர். ஆடவர் இன்னாரின் பிரயோஜனத்தைத் தெரியாமலிருக்கவில்லை. ஸ்திரீகளால் இப்பிரபஞ்சம் அடையும் நன்மை எழுதற்பாலதன்று. சில தேயத்தில் சில வகுப்பார் சில காலம் இவர்களைத் தாழ்விலாக்கி ஹிம்சித்தனர். சிலர் உன்னதஸ்தானம் அளித்தனர். சிலர் மிருகவர்க்கத்துக்கும் சரியாக, இல்லை, அதிலும் தாழ்வாகவும் இவர்களை நடத்திக்கொண்டு வந்தனர். இவைகளெல்லாம் உலகச் சரித்திரங்களின் அம்சங்களாக அமைந்திருக்கின்றன. அவைகளை விளக்க யாம் இங்கு எழுதுகோல் எடுக்கவில்லை. இச்சிறிய நூலின் வாயிலாய் மகளிருக்கு "இஸ்லாம்" எவ்வித நன்மையைச் சட்ட பூர்வமாய்த் தந்து அதை அநுசரிக்கும் நியமனக் கட்டளைகளையும் அமைத்து இருக்கின்றதென்பதை ஆராய்வதே எமது நோக்கம். அத்

துறையால் சில குறிப்பிட்ட பிரபல வகுப்பாரின் சமூகத்தில் ஸ்திரீகளுக்கு எவ்விதநிலைமை கொடுக்கப்பட் டிருக்கின்றதென்பதைச் சிறிது ஆராயாது இருக்க முடியவில்லை.

## கிரீக்தேய மாதர்கள்

கிரீக் தேசத்தில் பெண்களின்மேல் ஆடவர்கள் அதிக ஆதிக்கம் பெற்றிருந்தனர். விவாக காலத்தில் புத்திரிகளை விற்பதும் ஒருகாலத்தில் கிரீக் தேசத்தில் தாராளமாய்க் கையாளப்பட்டது. இத்தேசம், தேசச் சரித்திரத்தில் தோன்றிய காலத்தில் ஸ்திரீகளின் நிலைமை சிறிது சீர்திருத்தப்பட்டது. ஆனாலும், அவர்களது சன்மார்க்க நியதிகள் கீழ்நோக்கிப் போய்க்கொண்டே இருந்தன. சன்மார்க்க விரதமுள்ள ஸ்திரீகள் ஒதுங்கியே வாழ்ந்து வந்தனர். மனைவிகளை இருவிதமாக நடத்தினர்: புருடனிடத்து வாய்மை மாறாத மனைவி என்றும், மிஸ்ட்ரஸ் [பிரியை(Hetarea)] என்றும், இரண்டுவிதமாக நடத்தப்பட்டனர். ஒதுங்கி வாழும் மனைவிகள் தையல் வேலை, இல்லறத் தொண்டு, இவைகளிலேயே தம் தம் வாழ்நாளைக் கடத்தினர். இவர்கள் தங்கள் வீட்டில் ஒரு தனிமையான பாகத்தில் வசிப்பது வழக்கம். பிறர் அங்குச் செல்லக்கூடாது. தனம்படைத்தவர்கள் வெளியிற் புறப்படுவது அபூர்வம். ஏதோ சிற்சில சந்தர்ப்பத்தில் அப்படிப் புறப்பட ஏற்படினும், பெண் அடிமை கூடப் போவது வழக்கம். தற்காலத்தைப்போல் மகாநாடுகளுக்கும், மேடைகளுக்கும் போவதென்பதை இன்னார் அறியார். புளூடார்க் (Plutarch) என்பவரின், காலத்துக்குப் பிறகு இவ்

வகுப்பாரின் நிலைமைகள் இன்னம் மாற்றமுற்றன. எப்படியெனில், விவாகத்துக்குமுன் பெற்ருேரின் ஆதிக்கத்துக்கு உட்பட்டிருப்பாராயினர். பெற்ருேரின் திருப்திக்கே விவாகம் செய்து கொடுக்கப்படும். புருடனைப் பெற்றகாலத்து இவரின் கீழ் இருக்கவேண்டியவராயினர். விதவையான காலத்தில் புத்திரரின் ஆதிக்கம் நடத்தப்பட்டது. இன்னும் வாரிசுமுறையிலோ ஆண் சந்ததிகளே முன்னணி பெற்றிருந்தனர்.

கல்வித்துறையானது, முன் சொல்லப்பட்ட மிஸ்ட்ரஸ் (Mistress) என்ற மனைவியின் ஆதீனத்தில் விடப்பட்டிருந்தது. அக்காலத்துப் பிரபல ஆடவரும் இவ்வகுப்பு ஸ்திரீகளிடமே அதிகம் பற்றுள்ளவரா யிருந்தனர். அநேக ஆடவர் இவர்களிடம் கல்வி பெற்றும் அநேகருக்குக் கல்வி போதித்து முள்ளனர். டியோட்டிமா (Deotima) என்ற இவ்வகுப்பு மாதுக்குத்தான் அதிகம் கடமைப்பட்டிருப்பதாக ஸாக்ரட்டீஸ் (Socrates) என்ற பெரியார் கருதினர். ஸ்பார்ட்டாவில் (Sparta) ஆரோக்கியத்துடன் கூடிய மகவைப் பிறப்பிக்கமாட்டாள் என்று கருதப்படும் ஸ்திரீகளை அரசாங்கத்தின் உத்தரவால் வதைத்து வந்தனர். இதனுல் பெண்கள் எண்ணிக்கையில் அதிகம் குறைந்துபோய் ஆடவர் ஜனத்தொகையானது பலமடங்கு அதிகப்பட்டது. இதன்பயனுய் ஒரு மனைவிக்குப் பல புருஷர்கள் ஏற்படவேண்டியவராயினர். வயோதிகம் அல்லது பலஹீனமுள்ள புருடன் தனது பால்ய மனைவியைப் புஷ்டி ஆரோக்கியமுள்ள புருடனிடம் கொடுக்கவேண்டும் என்ற உத்தரவும் ஒரு காலத்தில் பிறப்பிக்கப்பட்டிருந்ததாம்!

## சீனதேய மாதர்கள்

சீன தேசத்தில் ஸ்திரீகளின் நிலைமை அதிகம் தாழ்வாக்கப்பட் டிருந்தது. ஸ்திரீகளின் பாதங்களை, இயற்கைக்கு மாறாய், சிறு பிராயத்திலேயே ஈயம் அல்லது இரும்பு இவைகளைக்கொண்டு இறுகக்கட்டி வளராதபடி நசுக்கிப் பலஹீனப்படுத்தியும் அங்கக்குறைவு பண்ணியும்வந்தனர். (இக்கொடிய முறை தற்காலத்தில் ஒழிக்கப்பட்டுவிட்டது.) இல்லறவாழ்க்கையில் ஏற்படக்கூடிய அசம்பாவிதங்களைக் கொண்டோ, அல்லது கற்பின்மையின் காரணமாகவோ, விவாகரத்து செய்துகொள்ள இத்தேசத்துச் சட்டம் அனுமதியளித்தது. பிற புருஷனை விரும்பிய ஒரு நாயகியும் அவளின் காதலனும் நெருங்கியிருக்கும் சமயத்தில் சுய புருஷன் தெரிந்துகொண்டால் இவர்களைச் சுப புருஷன் வதைப்பதுண்டு. இல்லாவிடில் அவள் தண்டிக்கப்படுவாள். இன்னும் அவளை வீட்டிலிருந்து துரத்தியும் விடுவார்கள். அல்லது அவள் காதலித்த புருஷனிடம் அல்லது வேறு ஆடவரிடம் அவளை விற்றுவிடவும் செய்வார்கள். தம்பதிகள் பரஸ்பர சம்மதத்தின்பேரிலும் விவாகத்தை ரத்து செய்துகொள்ளலாம். மனைவி தன்னை அடித்தால், புருஷன் அவளை நீக்கிவிடலாம். இன்னும் அவள் லாகிரி, மது, இவைகள் உபயோகித்தாலும் விவாகத்துக்கு முன் கற்பிழந்திருந்தாள் என்று தெரிந்தாலும் வீட்டை விட்டு ஓடிப் போனாலும் மனைவியைப் புருஷன் நீக்கி விடலாம். இஃதல்லாது மலடு, சோம்பல், புருஷனின் பெற்றோரை மதியாமை, பொறாமை, களவு, தீராவியாதி,

வின் சம்பாஷணை இவைகளான ஏழு குறைகளின் காரண மாயும், ஒரு புருஷன் தன் மனைவியை நீக்கிவிடலா மென்று சீன தேசத்துப் பெரியார் கன்பூஷியஸ் (Confucius) அனுமதி அளித்துள்ளார். ஆனல், விவாகத்திற்குப்பின் பொருளுண்டானலும், அல்லது மனைவியைச் சம்ரக்ஷணை செய்யச் சுற்றத்தார் இல்லை என்று தெரிந்தாலும், மேற் கூறிய காரணங்களைக் கொண்டு விவாகரத்து செய்வதில்லை. தன் விவாகத்தை ரத்து செய்துகொள்வதற்கு மனைவிக்கு அனுமதி கொடுக்கப்படவில்லை. ஆனலும் முக்கிய அசம்பா விதங்களைக் கொண்டு நீங்கிக் கொள்வதற்கு மனைவிக்கு இடமளிக்கப்பட் டிருந்தது. மூன்று வருஷம் வரையில் புரு ஷன் தன்னைச் சம்ரக்ஷணஞ் செய்யாது விட்டிருந்தால், அவ னின் அனுமதி யில்லாமலேயே நியாயாதிபதியின் உத்தர வின்பேரில் ஒரு மனைவி தன் புருடனை நீக்கிக்கொள்ளலாம். புருஷனின் பெற்ருேர் தன்னை அதிகம் தூஷித்தால் மனைவி தன்னுடைய பெற்ருேர்ஸ்தலத்துக்குத் திரும்பப்போய்விட லாம். அப்படி யேற்பட்டால் புருஷன் ஜீவனும்சம் கொடுக்க வேண்டியதுடன் அவளுடைய சீதனங்களையும் திரும்பக் கொடுக்கவேண்டும்.

## ஜப்பான் தேச சகோதரிகள்

பழைய காலத்தில் ஜப்பான் தேசத்தில் ஆடு மாடுகளைப் பார்க்கிலும் கேவலமாய் ஸ்திரீகளை நடத்திவந்தனர். ஆனல், கல்வியும் நாகரிகமும் அளவளாவி அந்நாட்டில் வளர்ந்தேறி வந்ததன் பயனய் மக்களின் மனேபான்மை திடப்பட்டுப்

புராதன நோக்கம் ஒழிந்தது. ஸ்திரீகளுக்குத் தாராளமாய்க் கௌரவம் அளிக்கப்பட்டிருக்கிறது. "மனைக்கு மதிப்புற்ற மங்கை" என்ற கௌரவப் பெயரும் ஸ்திரீகளுக்கு அந்நாட்டில் பொதுவாய்த் தற்சமயம் வழங்கப்படுகின்றதென்றால், அவர்களின் முன்னேற்றத்தை வாசிப்பவர்கள் தாமே யூகித்துக் கொள்ளல் சாலும். மேல் நாட்டுச் சட்டத்தின் கோள்கைகளை யொட்டித் தற்காலம் ஜப்பானில் விவாகரத்துச் சட்டம் கையாளப்படுகிறது.

## பாரசிகம்

பாரசீக தேசத்தினரும் ஸ்திரீகளைத் தாழ்வாகவே நடத்தினர். ஈரானும் அப்படியே.• பாரசிக தேசத்துப் பெரியார் ஜொராஸ்டர், (மதத் தலைவர்) இது விஷயமாய்ச் செய்துள்ள சீர்திருத்தங்கள் கப்பலேறிப் போய்விட்டன போலும்! (கிறிஸ்து) ஆறுவது நூற்றாண்டின் ஆரம்பத்தில் மஜ்டக் (Mazdak) என்பவர், "பெண்ணிலும் பொருளிலும் பொது ஜனங்கள் எல்லோரும் பங்காளிகள்" என்று தீர்மானித்து இதற்கான அனுமதியும் கொடுத்தனர். நெருப்பு, தண்ணீர் இவைகள் எல்லாருக்கும் பொதுவானதுபோல் இவர்களும் பொதுப் பொருளாய் ஆக்கப்பட்டிருந்தனர் சகோதரியை மணந்துகொள்வது சட்டமாய் அனுசரிக்கப் பட்டது. அந்நாட்டு மக்களுள் சிலருக்கு இப்பழக்கம் அருவருப்பைத் தரவில்லை. பாரசிகத்தில் ஸ்திரீகள் இருந்த சீர்கேடான நிலைமைகளும் இஸ்லாத்தால் அவைகள் ஒழிக்கப்பட்டு உன்னத நிலைமை யடைந்ததும், பிரத

வ்சி, நிஜாமி என்ற இந்த இரண்டு முஸ்லிம் கவிகளால் அள வளாவி எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. இவர்கள் எழுதியுள்ள நூல்களை வாசித்தவர்களுக்கு இந்நாட்டிற்கு இஸ்லாம் பொதுவாய்ச் செய்துள்ள தொண்டு எப்பாலது என்று தெளிவாய்ப் புலனாகும். பிறநாட்டார் அத்தேசத்தைப் பற்றி எழுதியுள்ள நூல்களைப் பார்க்கிலும் அந்நாட்டுப் புதல்வர்களின் நேரிட்ட அனுபவத்தால் அவரே எழுதியுள்ள விஷயம் எவ்வளவு உண்மையைத் தரும் என்பதே வாசிக்கும் நேசர்கள் ஆலோசிக்க வேண்டிய நுட்பமாகும்.

## பௌத்த மதம்.

பௌத்த மதம் ஸ்திரீகள் விஷயத்தில் ஒரு குறிப்பிட்ட ஸ்தானத்தை அவர்களுக்கு அளிக்கவில்லை. மேலும் ஆடவருக்கும் மகளிருக்கும் சமத்துவம் போதிக்கவில்லை. இதன் ஸ்தாபகர் கௌதம புத்தரின் வாழ்க்கையை நோட்டமிட்டால் ஸ்திரீயைத் துணைவியாகவும் சகாவாகவும் இவர் கொள்ளவில்லை என்பது புலனாகும். இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டுக்கொண்டால் தனக்கு நிர்வாண (மோட்ச ஜோதி) கிடைக்காது என்று இவர் எண்ணினர். வாசிக்கும் சோதரர்கள், இங்கு கவனிக்கவேண்டிய விஷயம் ஒன்றுண்டு. அஃதாவது, திருநபி முஹம்மது ஸல் அவர்களது கொள்கைக்கும் கௌதமரின் கொள்கைக்கும் உள்ள பெரிய வித்தியாசம். திரு நபி அவர்கள் தம் வாழ் நாள் முழுவதையும் இல்லறத்திலேயே கடத்தினர்கள்; இல் வாழ்க்கையி லிருந்து கொண்டே எவருக்கும் கிட்டாத உயர்வை (ஆண்டகையின்

சன்னிதானத்திலும், உலகிலும்) பெற்றிருக்க, கௌதமர் இல்லறத்தால் தீமை விளையுமெனப் பயந்து இதை நீத்தார். இது விஷயமாய் இங்கு விரிப்பதற்குத் தலையங்கம் இடமளிக்காததால் நாம் படித்து வந்த விஷயத்தைக் கவனிப்போம்: கௌதமர் பல துறையிலும் திருத்தங்களை உட்புகுத்தினர். ஆனால், ஸ்திரீ புருஷ சமத்துவத்தை விட்டுவிட்டார்.

பலதார மணமும் விவாகமும் செய்து கொள்ளாது பிற ஸ்திரீயுடன் கூடி வாழ்வதும் புத்த மதத்தில் பழக்கங்களாய்க் கையாளப்படுகின்றன. பலதார மணத்திலும் ஒரு புருஷன் எத்தனை ஸ்திரீயைத் தான் மணக்கலாம் என்ற சட்ட நிர்ணயமும் இம்மதத்தில் ஏற்படவில்லை. பர்மா தேசமானது இம் மதத்தைப் பின்பற்றியவர் நிறைந்த தேசம். இங்குப் பிராமண ரிஷியாகிய மனு என்பவரால் எழுதப்பட்ட சட்டங்களைத் தழுவியே பழக்க வழக்கங்கள் அனுஷ்டிக்கப்படுகின்றன. மானுஜியில் (பர்மிய மத நூலில் ஒன்று) விவாகம், இதன் ரத்து, வாரிசு பாத்தியம், இவைகள் சம்பந்தமாய் அதிகம் கூறப்பட்டிருக்கின்றன. இவைகளை அவர்கள் பின் பற்றுவதால் பிராமணர்களால் தங்கள் ஸ்திரீகளுக்கு அளிக்கப்பட்டிருக்கும் நிலைமையைப் பார்க்கிலும் சற்றே சிறந்த நிலைமையைப் பர்மியர்கள் அளித்திருப்பதாகத் தெரிகிறது. சில காலத்தில் இத்தேசத்து ராஜ குடும்பத்தில் சகோதரியையும் நெருங்கிய (மணக்கத்தகாத) பந்துக்களையும் விவாகம் செய்யும் வழக்கம் இருந்து வந்தது. பொது மக்களிடத்தும், இறந்துபோன மனைவியின் தாயையும், இறந்துபோன மகனின் மனைவியையும், மணக்கும்

பழக்கமுண்டு. தற்காலக் கல்வி வளர்ச்சியின் பயனுய், மகளிரின் நிலைமை ஒரு விதமாக முன்னேற்றமடைந்து வருகின்றது. வாரிசு முறையில் ஆடவரைப்போல் பெண்ணுக்கும் பாத்தியம் அளிக்கப்படுகின்றது.

## ஹிந்து சகோதரிகள்.

இனி நமது ஹிந்து சகோதரிகளின் அந்தஸ்தைச் சற்று ஆராய்வோம்: இந்தியாவில் ஹிந்துக்களிடத்து மனுவின் சட்டமே பிரதான மென்பது வெளிப்படை.

1. அவர் சொல்லுகிருர்: "ஒரு சிறுமியாலோ, பால்யை யாலோ, அல்லது வயது முதிர்ந்த ஒரு ஸதிரீ யாலோ, தன் மனையில் சுயேச்சையாய் எக்காரியமும் செய்து முடித்தல் கூடாது." (மனு. சுலோ. 147)

2. "இளமையில் தந்தைக்கும் பால்யத்தில் பர்த்தாவுக்கும், பர்த்தா இறந்த பிறகு தன் மகனுக்குமாக ஒரு ஸ்திரீ உட்பட்டிருக்க வேண்டும். சுயேச்சையாயிருத்தல் எக்காலமும் கூடாது." (மனு. சு. 148)

3. "தன் தந்தை, பர்த்தா, அல்லது புத்திரர்களை அவள் விட்டுப் பிரிதல் கூடாது. அப்படிப் பிரிவதால் (புருஷனதும் தனதும்) குடும்பங்களை இழிவுபடுத்தி விடுவாள்." (மனு. சுலோ. 149)

4. "தந்தையால் அல்லது அவர் உத்தரவு பெற்ற தனது சகோதரனுல் இவள் யாருக்குப் பாரியாளாக்கப்படுகிருளோ, அவனுக்கு இவள், அவன் ஆயுள் பரியந்தம் உட்

பணியவேண்டும். அவன் மரித்த பிறகு அவன் பெயருக்கு ஹீனம் இழைத்தல் கூடாது." (மனு. சு. 150)

5. "துன்மார்க்க னானாலும், பிறர்மனை இச்சித்தவனா னாலும், அல்லது நற்குண மில்லாதவனானாலும், கடவுளைப் போல் தன் புருஷனைப் பதிவிரதையான ஸ்திரீ, அடிக்கடி தொழவேண்டும்." (மனு. சு. 154)

6. "இவ்வுலகில் தன்னை எத்துணைக் காப்பாற்றிக் கொண்டாலும், தனது பிரஜா இச்சையாலும், தீய குணத் தாலும் இரக்கமின்மையாலும் புருஷனிடம் பக்தியற்றவளா யிருக்கின்றாள்." (மனு. சுலோ. 9, 4)

7. "படுக்கை இச்சை, மனை இச்சை, நகை இச்சை, துராசை, கோபம், துர்நடத்தை, பொறாமை இவைகளை ஸ்திரீகளின் ஜன்மப் பொருளாய்க் கடவுள் சிருஷ்டியின் காலத்தே ஏற்படுத்தியுள்ளார்." (மனு. 9, 17)

8. "மனிதனைக் கெடுப்பதே ஸ்திரீகளுக்கு இயற்கை; இதற்காகவே அறிவாளிகள் அவர்கள் முன்னில் எச்ச ரிக்கையுட னிருப்பார்." (மனு. 2, 213)

9. "அறிவில்லாரை மட்டிலுமல்ல, அறிவுள்ளவரையுங் கூட ஸ்திரீகள் துன்மார்க்கத்தில் இழுத்துவிடுவார்கள். மேலும் அவனை அடிமையாகவு மாக்கிவிடுவார்கள்." (மனு. 2, 124)

இவைகளை வாசிக்குங்கால் ஹிந்துமதத்தில் ஸ்திரீ

களுக்குச் சுயேச்சை ஒழிக்கப்பட் டிருக்கின்ற தென்பதும் அவர்கள் துர்ச் சிருஷ்டியாகவே கருதப்பட்டிருக்கின்றனர் என்பதும் வெளிப்படை. பரிதாபம்!

பலதார மணத்தைப் பற்றி ஹிந்துக்கள் துவேஷிக்கின்றார்க ளல்லவா? அஃது அறியாமை வாய்ப்பட்டதன்றோ? இது சம்பந்தமாய் மனு என்ன எழுதுகிறார்?—

(A) "முதல்தாரமாய் மணக்கச் சமக்குலத்து மகளே சிலாக்கியம்; ஆகையால் மறுமுறையாகவும் விவாகம் செய்துகொள்ள விரும்புகிறவர் கீழ்க்கண்ட ஸ்திரீகளை மணக்கலாம்." (மனு. 3, 12)

(B) "ஒரு கன்னிகையைக் காட்டிவிட்டு வேறு கன்னிகையைக் கொடுத்தால் மணவாளன் இருகன்னிகைகளையும் அதே பரிசத்துக்கு மணக்கலாம். கடவுள் அப்படி ஏற்படுத்திவிட்டார்." (மனு. 8, 204)

(C) "உயர்குலத்தான் தன் குலத்தவளையோ, அல்லது கீழ்க் குலத்தவளையோ, மணந்தால் குலமேன்மைக்குப் பொருந்த முறைப்படி நடத்தவேண்டும்." (மனு. 9, 85)

இந்தச் சுலோகங்களைப் போல் இன்னும் அநேக சுலோகங்க ளிருப்பதைக் கொண்டு, பலதார மணமும் கலப்பு விவாகமும் அனுமதிக்கப்பட் டிருக்கின்றன என்று ஸ்தாபிக்கப்படலாம். ஆனால், எத்தனை தாரம் என்பது வரையறுக்கப் படாதது ஓர் இழுக்காகும். வரையறுக்காது அனுமதியளித்திருப்பது இல்லறவாழ்க்கைக்கும் உலக ஆசாரங்

களுக்கும் சமூக ஒழுங்குக்கும் இதன் கௌரவத்துக்கும் பெரும் ஹீனத்தை வருவிக்கும்.

"முப்பது வயதையுடைய ஒரு மனிதன், தனக்குப் பிரியப்பட்ட பன்னிரண்டு வயதையுடைய கன்னியையோ, அல்லது இருபத்து நான்கு வயதையுடைய ஒருவன், எட்டு வயதுள்ள ஒரு சிறுமியையோ மணந்து கொள்ளலாம். தனது வேலைகளுக்கு இடையூறு உண்டாகுமானல் முன்னதாகவும் கலியாணம் செய்துகொள்ளலாம்." (மனு. 9, 94)

இதனல் சிறுமிகள் விவாகத்துக்கு உத்தரவளிக்கப் பட்டிருக்கிறது. இதன் ஆதாரவைப் பெருக்கியே சிசுவுக்கெல்லாம் "தாலி" ஏற்பட்டுவிட்டது. இதை ஒழிக்கவே சாரதா சட்டம் தோன்ற வேண்டிய அவசியமும் ஏற்பட்டு விட்டது. விதவா விவாகத்தைப் பற்றி ஹிந்துக்களிடத்து அனேக அபிப்பிராய பேதங்கள் உண்டு. மனு இதை ஆட்சேபிக்கிறர். நாரதர் இதை ஆதரிக்கிறர். தற்காலத்தில் ஏற்பட்ட விழிப்பும் இஸ்லாத்தின் பிரசாரமும் இத்துறையில் அதிக நன்மையை அளித்து வருகின்றன. இதன் பயனய் விதவா விவாகம் அனுசரிக்கப்பட்டு வருகின்றது. இதற்காக ஹிந்துக்களிடமும் பெரும் முயற்சி ததும்பி வருவதால் அதிசீக்கிரம் இது தாராளமாய்க் கைக்கொள்ளப்பட்டு ஆயிரக்கணக்கான ஆத்மாக்களின் நன்றியை ஹிந்துத் தலைவர்கள் (இத்துறையில் உழைப்பவர்) பெறுவார்கள். விதவா விவாகம் செய்யாததன் பயனகவே எவரும் நடுங்கும் சதி (உடன்கட்டை ஏறுதல்) என்னும் முறை

அநுசரிக்கப்பட்டது. இக்கொடுமையை ஒழித்ததும் இஸ்லாத்தின் புதல்வர், மஹா அக்பர் சக்கரவர்த்தியே யாவர். புருஷன் இறந்தால், அவனுடைய பிரேதத்துடன் உயிருடனிருக்கும் மனைவியும் தீக்கிரை யாக்கப்பட்டாள். புருஷன் தூரதேசத்தில் இறந்தால் உயிருடனுள்ள அவனுடைய மனைவியைத் தனியே வைத்து எரித்துவிடுவது வழக்கம். என்ன விபரீதம்! என்ன சட்டமுறை!! அக்பர் சக்கரவர்த்திக்குப் பின்னல் அவரால் ஒழிக்கப்பட்ட இந்த அநுஷ்டானம் கொஞ்சமாய் மறுபடியும் ஹிந்துக்களிடைத் தலைகாட்டிற்று. அதை உணர்ந்த ஆங்கில அரசாங்கத்தாரின் கவர்னர் ஜெனரலாகிய லார்டு வில்லியம் பெண்ட்டிங்க் என்பவர் 1892-ல் அதைச் சட்ட வாயிலாய் ஒழித்தனர்.

வாரிசு முறையில் ஹிந்துச் சகோதரிகளின் அந்தஸ்தைக் கவனிப்போம்:

"தானும், தன் மனைவியும், மக்களுமாக, இம்மூன்று அம்சங்களும் படைத்த ஒரு நபரே பூரண மனிதனுவான்; தன் மனைவியுடன்" புருஷன் ஒன்று பட்டவனுவான்." (மனு). கலியாணம் செய்தவுடன் பெற்றோரின் பாதுகாப்பிலிருந்து புருஷனின் பாதுகாப்புக்கு மனைவி வருவதால் இவர்களுக்கிடையில் விவகாரம் ஏற்படுத்தல் ஏற்கற் பாலதன்று. சில ஹிந்து வகுப்பாரிடம் மாத விடாயின் போது ஸ்திரீகளைக் குடும்ப காரியங்கள் எதிலும் சம்பந்தப்படாதபடி விலக்கி வாச ஸ்தலத்தின் வெளிப்பாகத்தில் தனிமையில் ஒரு குறிப்பிட்ட காலம் வரையில் வைத்து வருகின்றனர். இதில் அவர்

கள் கொள்ளும் துவேஷம் எவ்வளவு கொடுமை!

விவாகமான ஒரு ஸ்திரீயின் சொத்துக்கள் புருஷனு டையனவாகின்றன. புருஷன் சொத்தில் விதவைக்குக் குறிப் பிட்ட ஒரு அளவே உடையதாகிறது. ஆனால், பூரா சுதந் தரமில்லை. ஏனெனில், அவளிறந்தால் அப்படி அடைந்த சொத்தானது அவளுடைய வாரிசுக்குக் கிடைக்காது. புருஷனின் நெருங்கிய வாரிசே அதைப் பெறுவர். அந்தச் சொத்தின் வருமானத்தையே அவள் அனுபவிக்கலாம். விற் கவோ அல்லது வேறு பாராதீனம் செய்யவோ கூடாது. ஆனால், அவள் ஜீவிய காலத்தில் அனுபவிக்க வேண்டிய வரு மானத்தை மட்டில் பிறருக்கு மாற்றலாம். 1856-ம் வரு ஷத்திய "ஹிந்து விதவை மறுதார ஆக்ட்" படி விதவா விவாகம் ஏற்றுக்கொள்ளப் பட்டிருப்பினும், முந்திய புருஷன் சொத்தில் இவள் அடைந்த விதம் மறு விவாகம் செய்த உடன் முந்திய புருஷனின் நெருங்கிய வாரிசுக்கு உடைய தாகிறது. முந்திய புருஷனால் தனக்கு ஏற்பட்ட புத்திர னின் சொத்தில் விதவை அடைந்த விகிதமானது மறு தாரம் செய்தாலும் அவளுடையதே. புத்திரிகள் விஷயத்தில் பல பாகத்திலும் பல்விதமான முறை அனுசரிக்கப்பட்ட போதி லும், பொதுவாக அவர்களுக்குச் சரியான சொத்துப் பாத்தி யம் அளிக்கப்படவில்லை. வேறு வாரிசோ, அல்லது விதவைகளோ இல்லாதபோது புத்திரிகளுக்குச்சொத்து கிடைக்கும். அப்படிக் கிடைப்பதிலும் விவாகமாகாத புத் திரியே முதல் வாரிசாகிறாள். விவாகமாகியும் க்ஷேமமான சரியான அந்தஸ்து இல்லாதவள் இரண்டாவது வாரி

சாகிறாள். விவாகமாகி க்ஷேம நிலைமையிலுள்ள புத்திரி கடைசியாகிறாள். விவாகமாகாத கன்னிகையா யிருந்தால் விவாகமாகிய சகோதரிக்குப் பாத்தியமில்லை. விவாகம் செய்தும் க்ஷேமமா யில்லாவிட்டால் விவாகமாகி க்ஷேம மாயிருக்கும் சகோதரிகளுக்குப் பங்கு கிடைக்காதாம்.

ஹிந்து சட்டப்படி விவாகரத்து என்பதே கிடையாது விவாகத்தை நிரந்தர ஐக்கியமெனக் கருதுகின்றனர். மதம் மாறினாலும், புருஷனை நீத்தாலும், வியபிசாரியாகிவிட்டாலும் விவாகரத்து ஏற்படுவதில்லை. பொதுவாய் ஆராயுங்கால், ஹிந்து சகோதரிகளின் சமூக நிலைமை மதத்தால் அதிகந் தாழ்மையாக்கப்பட் டிருக்கின்றது.

## யூதமத சகோதரிகள்

யூதமத (Jewish) சகோதரிகளின் நிலைமை என்ன? "கெடுதியும் மரணமும் வினையும் இடமே ஸ்திரீகள்" என்ப தாய் இம்மதத்தவர் கருதுகின்றனர். பாபத்துக்குக் காரண பூதம் ஸ்திரீகளே; அவர்களாலேயே நாம் சாகின்றோம் எனவும் எண்ணுகின்றனர். மனைவியைக் கிரயம் பெறு வதும், பலதார மணமும் இவர்களிடை அதிகம் பரவியிருந் தன. விவாகரத்து செய்வது புருஷனின் பிரத்தியேக உரிமை. சிறிது காலத்திற்குப் பிறகு மனைவிக்கும் உரிமை ஏற்பட்டதாம்! ஓர் அற்பக் குற்றத்திற்கெல்லாம் விவா கத்தைப் புருஷன் ரத்து செய்துவிடுவது வழக்கம். ஆனால், பொது ஜனங்களின் முன்பாகப் பகிரங்கமாய்ப் பிரதிஷ்டை செய்யப்பட வேண்டுமென இருந்ததால் அதிருப்தியை விளைக்குமெனப் பொது ஜனங்கள் அபிப்பிராயப்பட்டால்

நிறுத்தப்பட்டுப் போய்விடும். அநியாயமாய் ஒரு மனைவியை நீக்கினுல் அவளுடைய மஹரைப் புருஷனின் சொத்தினின்றும் கொடுக்கவேண்டும்.

பன்னிரண்டாம் நூற்ருண்டு வரையில் பலதார மணமும் இச் சமூகத்தாரிடமும் மலிந்தேயிருந்தது. ஜெர்மனி, வட பிரான்ஸ், இந்நாட்டிலுள்ள யூதர்களைப் பொறுத்த மட்டில் பதினோராவது நூற்ருண்டு ஆரம்பத்தில் பல தார மணம் ஒழிக்கப்பட்டுப் போயிற்று. அதைத் தழுவி ஏனைய ஐரோப்பிய நாடுகளும் இந்த ஆசாரத்தை ஒழித்துவிட்டன.

## கிறிஸ்துவ சகோதரிகள்

கிறிஸ்துமதத்தில் அவர்களின் வேதநூலின் வாயிலாய் ஸ்திரீகள் கௌரவப் படுத்தப்படவில்லை. அவர்களுக்குக் கௌரவமுமில்லை. "பாபிகள்" என்றும், மனிதர்களுக்குத் "துன்பத்தை" வருத்துவிப்பவர்களென்றும் இம்மதநூல் தெளிவாய்ப் போதிக்கின்றது. சமூகத்தாரிடத்து ஸ்திரீகள் அடைந்திருக்கவேண்டிய ஸ்தானம், பொறுப்பு, உரிமை, சமத்துவம், அதிகாரம், சுயேச்சை இவைகள் சம்பந்தமாய் இன்னரின் மதநூல்கள் தக்க ஆதாரமளிக்கவில்லை. சிற்சிலவிடத்து இவைகள் விஷயமாய்க் குறிப்பிடப்பட்டிருப்பினும் பொருந்தாதனவாயும், ஒன்றுக்கொன்று முரணுயுமே இருக்கின்றன. ஆனல், நாளடைவில் நாகரிகம் பெற்ற ஜாதியாரின் சிவில்சட்டங்களைப் பின்பற்றியும், காலரீதிக்கு இடங்கொடுக்க வேண்டியிருப்பதைக் கொண்டும் அரசாங்கச் சட்டவாயிலாய் அதிகமான சீர்திருத்தங்களைப் பெற்றுக்கொண்டனர்.

ஆனாலும், கிறிஸ்துவமதம் பாவியிருக்கும் எல்லா நாட்டிலும் எல்லா வகுப்பாரிடத்தும் ஒரே திட்டமான முறை அனுஷ்டிக்கப்படுவதாய் எண்ணுவதற்கில்லை. உரிமை, வாரிசுமுறை, பொறுப்பு இவைகள் நாட்டுக்கும் வகுப்பாருக்கும் ஒவ்வும்படி வேறுபட்டிருக்கின்றன.

டேனிஷ், ஸ்விஸ் இந்நாடுகளில் ஸ்திரீகளுக்கு நன்மதிப்பில்லாதிருந்தது. இட்டாலியின் சிறுமிகளுக்குத் தங்களின் தந்தையின் சொத்தில் உரிமை இல்லாதிருந்தது. பொது ஜனங்களின் கிளர்ச்சியால் சீர்திருத்தப்பட்டது. இங்கிலாந்தில் 1832-ம் வருடம் வரையில் விவாகமான ஸ்திரீ சுயேச்சையாய்த் தன் பெயரால் உடன்படிக்கை செய்யாத நிலைமை பொதுவாய்ப் பரவியிருந்தது. ஆனால், சிற்சில சந்தர்ப்பத்தில் அஃது அனுமதிக்கப்பட் டிருந்தது. சில விஷயத்தில் ஸ்திரீ பெயரால் அல்லது அவள் பெயரில் தாவா செய்யக்கூடாமலும், இன்னம் சில காரியங்களில் அவள் பெயரால் தாவா செய்ய இடமளித்தும், அவள்மேல் தாவாசெய்ய இடம் தராமலும் சட்டங்கள் முரண்பட்டனவாகவே யிருந்தனவாம். 1882-ம் வருடத்தில் ஸ்திரீகள் சுயமே சொத்துக்களை உடையவர்களா யிருக்கவும், வாங்கவும், அவைகளைப் பராதீனங்கள் செய்யவும் சம்ரக்ஷிக்கவும் பாத்தியம் அளிக்கப்பட்டது. ஸ்திரீகளாலோ அல்லது அவர்கள் பேரிலோ தாவா செய்யவும் உரிமை ஏற்பட்டது. வித்தியாசங்களும் ஒழிந்தன. இதைப்போலவே பற்பல கிறிஸ்துவ நாடுகளிலும் பற்பல விதமான நிலைமையே அனுஷ்டிக்கப்படுவதாய்த் தெரிகிறது. அது சட்ட சம்பந்தமான விஷயமா

யிருப்பதால் நாம் அதை அவ்வளவு பரிசீலனை செய்யவும் தெளிவாய் எடுத்து எழுதவும் இடமில்லை.

பலதார மணம் ஒழிக்கப்பட்டு ஏகதாரமே இச்சமூகத்தாரிடம் அனுஷ்டிக்கப்படுவதாய்ச் சிலர் வற்புறுத்தி எழுதுகின்றனர். கிறிஸ்துவ மதப் பெரியார்களில் ஒருவரான "சேயிண்ட் அகஸ்டைனும்" சக்கரவர்த்தி யாகிய "வாலண்டினியனு"ம் பலதார விவாகத்துக்கு அனுமதி யளித்துள்ளதற்கும், அனேக ராஜாக்களும் புரோகிதர்களும் மதத் தலைவர்களும் அனுஷ்டித்து வந்ததற்கும் தேசீய சரித்திரங்களே சான்ருக விருக்கின்றன. மேலும், பைபிளும் இதற்கு ஆதரவு அளிக்கின்றதே யொழிய இதை நிராகரிக்கவில்லை. ஆனல், இது விஷயமாய்த் திருக் குர்ஆன் தெளிவாய் வரையறையமைத்து இதற்கான நியாயமான நிபந்தனைகளையும் இயற்றி இருப்பதுபோல் ஏனைய மதத்தவரிடத்துக் காணப்படவில்லை.

விவாக ரத்து விஷயமாய்க் கிறிஸ்துவ மதத்திலுள்ள 'கத்தோலிக்' 'புராட்டெஸ்டெண்ட்' என்ற இரண்டு உபகிளைகள் ஒன்றுக்கொன்று முற்றும் மாறுபட்டிருக்கின்றன. முன் சொல்லப்பட்ட வகுப்பார் இதை ஏற்றுக் கொள்ளாமலும், பின்சொல்லப்பட்டவர் இதை அங்கீகரித்து மிருக்கின்றனர். "இறைவனல் ஒன்று படுத்தப்பட்டவரை எந்த மானிடரும் பிரிக்கக் கூடாது," என்று பைபிளில் குறிப்பிட்டிருக்கின்றது. மத நூலாசிரியர்களான மார்க், லூக்கா, மத்தேயு, பால் இவர்களெல்லாம் இதற்கு அனுமதியளிக்க, ஒரு சிலர் எந்தக் காரணத்தாலும் மனைவி புருடனை நீத்தல் கூடாது என்று நிர்ணயித்துள்ளனர். இவர்களிடம் ஏகோ

பித்த தீர்மானமே இல்லாதிருப்பதைக் கவனிக்குங்கால், நபி ஈசா (அலை) அவர்கள் விவாக ரத்துக்கும் அனுமதித்தனரா? இல்லையா? என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை. ஆனால், இஸ்லாம் ஐரோப்பாவில் உன்னத ஸ்தானமும் ஆட்சியும் பெற்றிருந்ததிலிருந்தும், அன்னாரின் அனுஷ்டானம் போதனை, எழுத்து இவைகளை ஆராய்ச்சி செய்ததைக் கொண்டும், முஸ்லிம்களுடன் அந்நாட்டார் பல காரணங்களைக் கொண்டு சம்பந்தத்தை இழைத்துக் கொண்டதைக் கொண்டும், நாகரிக வெளிச்சத்தால் ஒளியளிக்கப்பட்டதைக் கொண்டும், அரசாங்கச் சட்டவாயிலாய்ச் சமூகத்தின் ஏனைய துறைகளில் சீர்திருத்தத்தைத் தேடிக் கொண்டது போல் விவாக ரத்து விஷயத்திலும் செய்து கொண்டனர். அனேக ஏனைய துறைகளில் மத ஆதரவு எப்படி இல்லையோ அது போலவே இதற்கு மாகும்.

## இஸ்லாமிய சகோதரிகள்

எம்பெருமான் திருநபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தோன்றுவதற்கு முன்னும், தோன்றிய காலத்தும், அவர்களின் தாய் நாடாகிய அரேபியாவில் பொதுவாக ஸ்திரீகளின் நிலைமை அதிக விபரீதமாக இருந்தது என்பதை அறியாதாரில்லை. நிர்பந்தத்தின் பேரில் மணமுடிப்பதும், பொருந்தாத புருஷர்கள் பொருந்தாத ஸ்திரீகளை மணப்பதும், தகப்பனின் மறுதாரங்களான விதவைகளைப் புத்திரர்கள் பங்கிட்டுக் கொள்வதும், பெண் சிசுக்களை வதைப்பதும், பலதார மணமும், பல புருஷர்

விவாகமும் தலை ஓங்கித் தாண்டவமாடின. "தலாக்கு" ஒரு வாறுய் அனுஷ்டித்தே வரப்பட்டிருந்தது. வாரிசு பாத்தியம் இல்லாமலில்லை. ஆனால், நியதியற்றதா யிருந்தது.

இந் நிலைமையைத் திருக்குர்ஆன் சீர்திருத்தி விட்டது. அரேபியாவுக்கு மட்டில் இவ் வேதக்கட்டளை சம்பந்தப்பட்டதல்ல; உலகம் பூராவும் அனுஷ்டிக்கக் கூடிய முறையில் இச் சட்டங்கள் அமைந்துள்ளன. ஸ்திரீகளின் ஸ்தானம், உரிமை, சுயேச்சை, பாகத்துவம், அதிகாரம், கல்வி, இவ்வகையான சமூக அந்தஸ்துக்கள் தெளிவாய் வரையறுக்கப் பட்டிருக்கின்றன. சமூக வாழ்க்கையில் எம் மதத்தாலும் அளிக்கப் படாத உன்னதமும், கௌரவமும் தரப்பட்டிருக்கின்றன. வேறுமத நூல்கள் இவ்விதமான அந்தஸ்தைத் தந்திருப்பதாக எவரும் நிரூபித்தல் இயலாத விஷயமாகும்.

திருக் குர்ஆன், ஸ்திரீகளின் அந்தஸ்தைப்பற்றி என்ன சொல்லுகின்றது ?

"ஏ! மனிதர்காள்! நிச்சயமாய் ஒரு மனிதனினின்றும் ஒரு ஸ்திரீயினின்றும் நுங்களை யாம் சிருஷ்டித்துள்ளோம். நீங்கள் ஒருவருக்கு ஒருவர் அறிந்து கொள்ளவேண்டி இப் படிப் படைத்தோம்.........." (49 : 13).

சிருஷ்டியின் ஆரம்பத்திலேயே ஆடவருக்கும் பெண்டிருக்கும் ஏற்பட்டிருக்கும் சம்பந்தத்தை இவ்வாசகம் நன்ருய் விளக்கிக் காட்டி, இருவருக்கு மிடையில் படைப்பாலோ உதிரத்தாலோ வித்தியாசமில்லை என்பதை ஸ்தாபிக்கிறது. இது அன்னாரின் நிலைமைக்கு அஸ்திபாரக் கல்லாகும். இவ் வுண்மையை அறிந்து கொண்டால், ஸ்திரீ ரத்தினங்களைப்

''பாபி'' என்றும் சமூக அந்தஸ்தல்லவென்றும் தீர்மானித்துப் பகுத்தறிவில்லாத வருக்கத்துடன் சேர்த்தல் கூடுமா? என்ன பாருங்கள்! எவ்வளவு தெளிவாய்ச் சாதாரண உண்மைகளைக் கொண்டு மக்கள்—படித்தவரும் படியாதவரும்—உணரும்படி இவ்வேதம் போதிக்கின்றது! இவ்வுண்மையை எந்தச் சித்தாந்தத்தைக் கொண்டேனும் நிரூபித்தல் சாலுமா?

"ஏ! மனிதர்காள்! ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரிக்காதீர்கள். அவர்கள் நுங்களைவிட மேம்பட்டவர்களாயிருக்கலாம்; ஸ்திரீகாள்! ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரிக்காதீர்கள்; நுங்களைப் பார்க்கிலும் அவர்கள் மேம்பட்டவர்களாயிருக்கலாம்........." (49 : 11).

ஸ்திரீகளுக் கிடையிலும் ஒருவரை ஒருவர் ஏளனங் கூடச் செய்தல் தவறு என்று தீர்மானித்திருந்தால், இன்னுருக்கு இவ்வேதம் எவ்விதக் கௌரவத்தை அளிக்கின்றது என்பது தெளிவே! இச் சிறுகாரியத்திலும் அவர்கள்பால் எச்சரிக்கப்பட் டிருக்கின்றது என்ருல், ஆவசியகமான ஒவ்வொரு விஷயத்தையும்—சிறியதாஞலும் பெரியதாஞலும்—விளக்கிக்காட்டாமல் இத் திருவேதம் உலகுக்கு அளிக்கப்படவில்லை என்றும் நன்றே புலனுகும்.

"........அவர்களை (ஸ்திரீகளை) கௌரவமாக நடத்துவாயாக! அவர்களை வெறுப்பாயானல் ஒரு வஸ்துவில் அல்லாஹுத் தஆலா ஏராளமான நன்மையை வைத்திருக்க அதை நீ வெறுத்த தாகும்" (4 : 19).

" துர்நடத்தையைக் கொண்டு குற்ற முள்ளவளா

யிருந்தால் எளிதான தண்டனை அளிப்பாயாக! தன் குற்றத்திற்கு மன்னிப்புத் தேடித் தன்னைத் திருத்திக் கொண்டு அந் நடத்தைகளை ஒழித்து விட்டால் அல்லாஹுத் தஆலா இரங்குபவனு யிருக்கிறுன்; அவன் கிருபையாளன்" (4:16).

"மனைவியின் மேல் குற்றம் சுமத்தும்போது தங்களிருவரல்லாத சாட்சி இல்லையானால் இவர்களில் ஒருவரை நான்கு விடுத்தம் ஆண்டவனின் பெயரால் தான் உண்மையாளர்களில் ஒருவனு யிருக்குமென்று சத்தியம் செய்ய சொல்ல வேண்டும்" (24 : 6).

அவன் உண்மையற்றவர்களில் ஒருவனுயின், அல்லா(ஹ்)வின் சாபம் அவனுக்கு ஐந்தாவது விடுத்தமாக ஏற்படும். (24 : 7).

"ஆண்டவனின் பெயரைக்கொண்டு அவன் உண்மையற்றவனென்று அவள் நான்கு முறை உறுதிகூறினுல் அவளுக்குத் தண்டனை நீக்கப்படும்" (24:8).

அவன் உண்மையானவர்களில் ஒருவராயின், அல்லா(ஹ்)வின் கோபம் அவள்பால் ஐந்தாவது விடுத்தமாக உண்டாகும். (24:9).

தன் மனோபீஷ்டத்தை நிறைவேற்றிப் பரஸ்பரம் அகாரணமாய்க் குற்றமேற்படுத்த முடியாதபடி எளிதான சட்டவரம்பு ஏற்பட்டிருப்பதைக் கவனியுங்கள். பணப்பையைத் திறக்க வேண்டியதில்லை. நியாயவாதியைத் தேடவேண்டியதில்லை. அலைச்சலும் தொல்லையும் நம்மை நெருங்கா. உண்மையைக் கறக்க இறைவன் அளித்த முறை எவ்வளவு எளிது!

•

"தன்னுடைய மனைவியிடத்து அன்பா யுள்ளவன் சிறந்தவனு யிருப்பான். நுங்களிலெல்லாம் யான் என் மனைவிகளிடத்து அதிக அன்புடையவனுக இருக்கின்றேன்." (நாயக வாக்கியம்)

விவாக விஷயத்தில் எவரை மணத்தல் கூடாதென்னும் முறை திருக்குர்ஆனில் தெளிவாய்க் கூறப்பட்டுள்ளது. சமூக மாண்பைப் பாதுகாக்கும் சிறந்த அரண்களில் இது ஒன்றன்றோ? மானிட அமைப்புக்கும் மறுமணத்திற்கும் ஐக்கியம், அன்பு, நட்பு, விருத்தி முதலியவைகளுக்கும் இத்திட்டம் எவ்வளவு பொருத்தமா யிருக்கின்ற தென்பதைக் கவனிப்பீர்களாக! விவாகத்தில் இவ்வரம்பு இல்லாவிடில், இல்லற வாழ்க்கை புல்லறவாழ்க்கை யாகுமென்பதில் ஐயமுளதோ? இதை வாசித்து விட்டு, ஏனையமத நூல்கள் இது சம்பந்தமாய் என்ன செய்துள்ளன? இதற்கும் அவைகளுக்கும் என்ன வித்யாசம்? எந்தத் திட்டம் மானிட சாஸ்திரத்திற்கும் மனோசாட்சிக்கும் பொருத்தமுள்ளது? என்பதை நன்ருய் நீங்கள் விசாரிக்க வேண்டுமென விரும்பு கின்றேன். எந்தச் சட்டத்தையும் கட்டளையையும் மதத்தின் பேருக்காவது அதை நிருமாணித்த பெரியாரின் அந்தஸ்தின் பேருக்காவது (விசாரிக்காது) ஏற்றுக்கொள்ளல் உண்மையை விருத்திசெய்யாது. எதனிடத்து அறிவும் நியாயமும் பொருந்தி யிருக்கின்றன வென்பதை விசாரணை செய்வதே மனிதனின் வாழ்க்கையின் உன்னத குணமாகும். சுய அறிவை உபயோகிக்காது பின் தொடர்தல் நிம்மதியைத் தராது என்பதை ஒவ்வொருவரும் அனுபவத்தால் அறிதல் பாரிய உண்மையாகும்.

"நுங்கள் மாதா, மகள், சோதரி, பெற்ருேரின் சோதரி, சோதரன் மகள், சோதரி மகள், செவிலித்தாய், ஒரே பாலுண்ட சோதரி, மனேவியின் (வேறுபுருஷனுக்குப் பிறந்த) (உன் பாதுகாப்பில் இருக்கிற) மகள், உன் சொந்த மகனின் மனேவி, இவர்கள் நுங்களுக்கு (விவாகம் செய்வதற்கு) விலக்கப்பட்டிருக்கின்றனர். ஏக காலத்தில் இரு சகோதரிகளும் கூடா"............(4:23)

"........இன்னம், விவாகமான (யுத்தக் கைதிகளாய்க் கைப்பற்றப்பெற்ற ஸ்திரீயல்லாத) ஸ்திரீயையும் (விவாகம் செய்வதற்கு விலக்கப்பட்டிருக்கின்றன.) இது ஆண்டகையின் திட்டமாகும்..........." (4:24)

என்ன அழகான ஹத்துடன் கூடியமுறை! எவ்வளவு தெளிவாய் ஆண்டவன் பிரித்துள்ளான்! விலக்கப்பட்டிருக்கும் இவ்வுறவினரின் விவாக சம்பந்தத்தால் சமூக வாழ்க்கைக்கும் ஸ்தூல அமைப்புக்கும் உண்டாகக்கூடிய தீமையை இக்கால சாஸ்திர ஆராய்ச்சிகள் உறுதிப்படுத்தி யுள்ளன. என்னே இவ்வேதத்தின் உண்மை!

வியாதிவாய்ப் பட்டவர்களேயும், வியபிசாரியையும், வேதங்களேப் பின்பற்ருத ஸ்திரீகளேயும் மணத்தல் கூடாது. பின் சொல்லப்பட்டவர் இஸ்லாத்தைத் தழுவினல் இவரை மணக்கலாம்.

மணவாழ்க்கைக்கு ஒற்றுமையு அன்பும் சாந்தியும் அவசிய மல்லவா? இதைப் பெறுவதற்குத் தம்பதிகளிடம் ஏற்பட்டிருக்கும் பிரீதியே மூல வித்தாகும். இப்பிரீதியைத் தருவதற்கு இருவரின் தாராளமான சம்மதம் அத்தியாவசிய

மாகும். இதை உணர்ந்தல்லவோ பெற்றோர்கள் அல்லது சம்ரக்ஷகர் சம்மதத்தின் பேரில் பக்குவமாகாத பெண்ணையும் சுய சம்மதத்தின் பேரில் பக்குவமடைந்த பெண்ணையும் வதுவைசெய்யப்படல் வேண்டுமென இஸ்லாமியச் சட்டங்கள் கட்டளையிட்டுள்ளன. பெற்றோர்கள் சம்மதத்தின்பேரில் பால்யமாகாத பெண்ணை விவாகம் செய்துகொடுக்கலா மென்றிருந்தாலுங்கூட வியாதியஸ்தன், அடிமை, அறிவீனன் இவர்களுக்கு அன்னவரைக் கொடுத்தல் கூடாது. எவ்விதத்திலும், அச்சிறுமியின் பிற்கால நன்மைக்கு ஹீனம் ஏற்படாதபடி காத்தல் அவனது கடமை. சிறுவர், சிறுமி, அனாதை இவர்களின் நன்மையை இஸ்லாம் பூராவும் பாதுகாக்கின்றது.

## கலப்பு விவாகம்

இஸ்லாம் சமத்துவத்தை வற்புறுத்துகின்றது. ஜாதி, ஏழை, சீமான் என்ற பேதம் ஒழிக்கப்பட்டிருக்கின்றது. இஸ்லாத்தைத் தழுவிய எவரும் சகோதர சகோதரியாகப் பாவிக்கப்படவேண்டுமென்பதே இஸ்லாத்தின் அடிப்படையான கொள்கை. இவ்வேதத்தைப் பின் தொடர்ந்த மாதையோ அல்லது ஆண்டகையின் முன்னுள்ள வேதங்களைப் பின்பற்றும் சமூகத்தில் பிறந்த ஸ்திரீயையோ முஸ்லிம் மணந்து கொள்ள இஸ்லாத்தில் இடமளிக்கப்பட்டிருக்கின்றது. திருநபி அவர்கள் 'சபிய்யா' என்னும் ஒரு யூதமகளிரை முஸ்லிமாக்கி மணந்து கொண்டார்கள். இம்மாது ஒரு யூதத்தலைவரின் செல்வப் புத்திரியா யிருந்தனர். அக்காலம் இஸ்லாத்துக்கு ஏற்பட்டிருந்த நெருக்கடியான நிலைமையில் அவ்வகுப்

பாரின் ஆதரவும் அவர்களிடத்துச் சமாதானமும் வேண்டி இருந்ததைக்கொண்டும், திருக் குர்ஆனின் நோக்கத்தைத் தாங்கள் எவ்வகையிலும் பூரணமாய்ப் பின்பற்றுவதை நிரூபிப்பான் வேண்டியும், இதைப்போன்ற இதர உன்னத நோக்கங்களைக் கொண்டும் இவ்விவாகம் நடத்தப்பட்டது. என்னே! இவர்களின் பரந்த நோக்கம்! நியாயமான துறையில் ஸ்திரீகளுக்கு எவ்விதக்குறைவு மிருப்பதற்கு இஸ்லாம் இடங் கொடுக்கவில்லை என்பதை நன்ருய்க் கவனியுங்கள்.

## பலதார மணம்

இஸ்லாம் பலதார மணத்தைப் பூராவும் ஆதரிக்கின்றதென்றும், இது பெரியஅனுசார மாகுமென்றும், சமூகவாழ்க்கைக்கு இதனல் கெளரவமில்லை என்றும், ஸ்திரீகள் இதனல் இழிவு படுத்தப்படுகின்றன ரென்றும் சிலர் கண்டனம் செய்வது பொருத்தமற்ற பொருமையாளரின் பிதற்றலேயாகும்.

"ஏனெனில், வாரிசாய்ச் சொத்தைப் பாகித்துக் கொள்வதுபோல் ஸ்திரீகளைப் பங்கிட்டுக் கொள்ளாதீர்கள்" (4:22).

"அனுதைகளிடத்து நியாயமாய் நடந்துகொள்ள முடியாதெனப் பயப்பட்டால், உனக்கு நல்லவளாய்த் தெரிந்த இரண்டு, மூன்று அல்லது நான்கு ஸ்திரீகளை மணந்துகொள்; ஆனல், இவர்களுக் கிடையில் தாரதம்மிய மில்லாது நியாயமாய் நடக்கமுடியாது என்று பயப்பட்டால் ஒருத்தியையே மணந்து கொள்வாயாக!............இதுவே சாலச் சிறந்தது. உண்மையான பாதையை விட்டும் சருகாம லிருப்பதற்காகவே" (4 : 3).

இதில் தெளிவாய்க் கட்டளையிட் டிருப்பதை அறிந்தோ அல்லது அறியாமையாலோ இஸ்லாத்தில் பலதார மணம் தாராளமாய் அனுமதிக்கப்பட் டிருப்பதாக மதப்புழுக்குற்ற சிலர் கூறுகின்றனர். வேறு எந்த நூல் இவ்வளவு தெளி வாயும் இவ்வித அனுஷ்டானப் பொருத்தமுள்ள நிபந்தனை யின் வாயிலாலும் இக் காரியத்தை வெளியிட் டிருக்கின்றது? என்பதே எமது கடாவுதலாகும். முதலாய் இந்த உத்தர வானது வெளியாக்கப் பட்ட சந்தர்ப்பத்தைக் கவனிக்க வேண்டும். ஹிஜ்ரீ 3-வது (கி. பி. 626) ஆண்டு முஸ்லிம் களுக்கும் மக்காவாசிகளாகிய முஸ்லிம்களல்லாத அரபி களுக்குமிடையில் உஹுது என்ற இடத்தில் தொடுக்கப்பட்ட யுத்தத்தில் முஸ்லிம் வீரர்கள் 700 பெயர்களில் 70 வீரர்கள் வீரசுவர்க்க மடைந்தனர். இச் சேதமானது அக் காலத்தில் சிறு தொகையினரா யிருந்த முஸ்லிம் சமூகத்தில் ஆடவரற்ற அதிக அனாதைக் குடும்பங்களையும் அதிக ஸ்திரீ ஜனத் தொகையையும் விளைத்து விட்டது. மேலும், அக் கால நிலையால் இன்னம் அநேக யுத்தங்கள் நடைபெறக் கூடுமென் றும் அவைகளாலும் ஆடவர் சேதத்தின் காரணமாய் மேலும் அனாதைகளும் விதவைகளும் அதிகரித்து ஆடவர் குறைவு ஏற்படுமென்றும் எதிர்பார்க்கப்பட்டன. இக் காரணத்தினால் அனாதைகளைச் சம்ரக்ஷிக்கவும் துர் ஆசாரம் தலைகாட்டா திருக்கவும் வேண்டியே அக்காலத்து நிலை மையை உத்தேசித்து இக் கட்டளையை ஆண்டகை வெளி யிட்டான். ஆரம்பத்திலேயே அனாதைகளின் நன்மை பாது காக்கப்பட் டிருக்கிறது. சம்ரக்ஷிக்கக் கூடிய ஆற்றலும்,

அந்தஸ்தும் இருந்தால்தான் நான்குக்கு மேற்படாத மகளிரை மணக்கும்படியும் உத்தரவிடப் பட்டது. அந்தஸ்தும் ஆற்றலும் உண்டாயிரா விட்டால் ஏககாலத்தில் நான்கு மனைவிகளுடன் வாழ்தல் கூடாது என்பதும் இதனால் நன்றாய்ப் புலனாகும். குறிப்பிட்ட இந்தத் தொகை ஏற்படாதிருந்தால் சமூக ஒழுங்கின்மையும் ஆற்றலின்மையும் அன்பீனமும் ஏற்படு மென்பதுடன் அது மிருக வாழ்க்கையாகவும் மாறும். என்னே! இஸ்லாத்தின் அபூர்வ லக்ஷணம்! இவ்வரிய காரணங்களைப் பொதிந்த இக் கட்டளையை அறியாது பொறுமை வாய்ப்பட்டுப் பிதற்றுதல் அறிவின் லக்ஷணமாகுமா? இந்தக் கண்டிப்பான நிபந்தனையின் பேரில் ஏற்பட்ட இத்தகைய அனுமதியைக் கொண்டு இஸ்லாம் பலதார மணத்தைத் தாராளமாய் அனுஷ்டிக்க இடமளிக்கின்றது என்று எப்படிக் கூறுதல் பொருந்தும்? துர்ப்பழக்கத்தையும் அனுசாரத்தையும் வளர்த்துக் கொண்டிருந்த அக்கால நிலைமையை ஒழிக்கத் தோன்றிய இஸ்லாம் எப்படி இவைகளை ஆதரித்தல் சாலும்? ஆகையால் தாயற்ற சிறுவர்களையும் குடும்ப பரிபாலனத்தையும் காப்பான் வேண்டியும் புத்திர வேட்கையை நிவர்த்திக்கும் நோக்கம் பற்றியும் பிதுர் விருத்தி செய்வான் கருதியும் இல்லற வாழ்க்கைக்கும் முரணான குணம், நடத்தை, அன்பின்மை, நட்பின்மை, இவைகளை நீக்கி அவைகளைத் தேடிக்கொண்டு நிம்மதியாய் வாழ்வான் பொருட்டும், வியபிசாரங்களையும் தொத்து வியாதியையும் போக்குவான் கருதியும் இந்த நிபந்தனையோடு கூடிய அனுமதி தரப்பட்டது. இது அனுமதியே அல்லாது

அவசியமான கட்டளையல்லவென்பதை விரோதிகள் ஞாபகத்தில் வைப்பாராக! முஸ்லிம்கள் பெரும்பான்மை ஏகதாரமுடையவரா யிருப்பதை உலகத்தின் எப்பாகத்திலும் காணலாம். இதுவும் பொய்யா?

## குழந்தை மணம்

சிறுவர் சிறுமிகளை அவர்களுடைய இளம் பருவத்தில் விவாகத்துக்கு ஆளாக்குவதை இஸ்லாம் ஆதரிக்கவில்லை. தங்களுடைய உறுப்புக்களும், மனமும், அறிவும், ஸ்திரப்படுவதற்குமுன் அவைகளின் அழிவிற்கும், நஷ்டத்திற்கும் அவர்களை ஆளாக்குவதை இஸ்லாம் விரும்பவில்லை. இஸ்லாம் எத்துறையிலும் எவ்வகையிலும் திருப்தியையும் சாந்தியையும் முன்னேற்றத்தோடு கூடிய இன்பத்தையும் அளவளாய் அளிப்பதற்கு நிற்பதால் இந் நோக்கங்களுக்கு முற்றும் முரணான திட்டத்தை ஆமோதிக்காது என்பது உண்மை. இதற்கு மாறாய்ச் சொல்வது தர்க்கட்சியே யாகும். முஸ்லிம்களில் சிலர் தாங்கள் வசிக்கும் தேசத்து ஏனைய வகுப்பாரின் வழக்கத்தைப் பின்பற்றித் தவறாய் அனுஷ்டிப்பதை இஸ்லாமிய திட்டமாகக் கூறுவதும் பொருத்தமற்றதே என்பது எமது துணிபு.

திருக்குர்ஆன், 4:3-ல் "உங்களுக்கு நல்லவராய்த் தெரிபவரை மணந்துகொள்," என்று சொல்வதன் கருத்தென்ன? இதில் கட்டளையிட்டபடி பொருத்தமானவரை அல்லது பொருத்தமானவளைத் தெரிந்துகொள்வதற்குச் சிறுவர் சிறுமிகளிடம் பக்குவம் ஏற்படுமா? அறிவு பக்குவ

மடைந்தாலல்லவா தெரிந்தெடுப்பதற்குச் சாலும்? நல்ல மனிதன் நற்குண மடந்தை என்பதைச் சிறுவர் பகுத்தறிதல் முடியாது. இதனாலும் திருக்குர்ஆனின் நோக்கங்கள் தெளிவாய்ப் புலனாகும்.

## விதவா விவாகம், மறுதாரம்

இவைகளை இஸ்லாம் தடுக்கவில்லை. இவைகள் திருநபி அவர்கள் காலமுதல் அனுஷ்டிக்கப்பட்டே வரப்படுகின்றன. சமூக நன்மைக்கு இவை அவசியமானவை என்பதைத் தற்கால நாகரிக உலகம் தெரிந்து கொள்வதற்கு 1400 வருஷத்துக்கு முன்னதாகவே இஸ்லாம் இதை அறிந்து கொண்டிருக்கின்றதென்பதைக் கவனிக்க வேண்டும். சமூக வாழ்க்கைக்கும், இல்லற நன்மைக்கும் இஸ்லாம் எத்துணைப் பொருத்தமாயுள்ளது என்பதை மீண்டும் இங்குக் குறிப்பிடாமலிருக்க முடியவில்லை.

## விவாகரத்து

தம்பதிகள் ஒன்றுபட்டு, சாந்தியுடன் இல்லறம் நடத்த வேண்டுமென்பதை இஸ்லாம் பெரிதும் வற்புறுத்துகின்றது. இதற்கான முக்கிய அம்சங்களையும் அமைத்துத் திட்டப்படுத்தித் தந்திருக்கிறது. இல்லற வாழ்க்கையின் இன்பத்திற்கு மறுவேற்படாதிருக்கவே தம்பதிகள் சந்தோஷமாய்ப் பிரிந்து தன் தன் மன நிம்மதியைத் தேடி வாழ்வதற்கு இவர்களின் மணவாழ்க்கையின் பிரிவைச் சட்ட பூர்வமாய் அனுமதித்துள்ளது. ஆனால், இதை அதிகம் பாராட்டுகிறதென்றோ தாராளமாய்த் தூண்டுகிறதென்றோ கூறுதல்

தவறேயாகும். இல்லறவாழ்க்கையில் தம்பதிகளுக்கிடையில் ஏற்படக் கூடிய அசம்பவங்களினின்றும் தங்களைக் காத்துக் கொள்வதற்காகக் கண்டிப்பான அனேக நிபந்தனைகளின் பேரில் ஏற்படுத்தப்பட்ட ஒரு ஹேதுவே யொழிய அது பூரணமான இஸ்லாமிய நோக்கமோ அல்லது கொள்கையோ வன்று. அப்படித் தரப்பட்ட ஹேதுவையும் கையாளவோ அல்லது அனுஷ்டிக்கவோ குர்ஆன் எளிதில் சம்மதமளிக்க வில்லை. இல்லற வாழ்க்கையில் ஏற்படும் அசம்பவங்களை ஒழிக்க அவன் முயற்சிக்க வேண்டிய பற்பல சாதனங்களும் அவனுக்குக் குர்ஆனாலும் நாயக வாக்கியங்களாலும் சுட்டிக் காட்டப்பட் டிருக்கின்றன. இவைகளை எல்லாம் சாதித்து இவைகளால் பயன் இல்லை என்று உண்மையாய் நம்பிக்கை ஏற்பட்ட காலத்தில்தான் இதை இறுதிச் சாதனம் அல்லது இறுதி மார்க்கமாய்ப் பிரயோசனப்படுத்திக் கொள்ள இட மளிக்கப்பட் டிருக்கிறது. இன்னம் இதற்குத் தக்க காரண மும் அவசியமு மிருப்பதையும் அதை (பிரிவை) இரண்டில் ஒருவரோ சுயேச்சையாய் (நிர்ப்பந்தப்படுத்தப் படாமல்) விரும்புவதாய் மத்தியஸ்தர்கள் முன்னில் நிரூபித்தாக வேண் டும். முரணான மனைவியை நடத்தையாலோ, வார்த்தை யாலோ அல்லது சில காலம் (தாத்காலீகமாய்) விலகி இருப் பதைக் கொண்டோ அச்சமூட்டித் திருத்த முயலுதல் வேண்டும்.

“ஏ! நபியே! விவாகத்தை ரத்து செய்ய விரும்பின போது குறிப்பிட்ட முறைக்கு இணங்கச் செய்வீராக! குறிப்பிட்ட தினத்தைக் கணக்கிட்டுப் பார்ப்பீராக! உமது

எஜமானும் ஆண்டகை யிடத்துள்ள நமது கடமையின் பேரில் எச்சரிக்கையாக விருப்பீராக! இல்லத்தை விட்டு அவர்களைத் துரத்திவிடாதீர்! துர் நடத்தை இல்லாவிட்டால் அவர்களைப் புறம்பாக்காதீர்! இது ஆண்டகையின் உத்தர வாகும். ஆண்டகையின் இந்த உத்தரவை மீறினல் உண்மை யாக உம்முடைய ஆத்மாவுக்கு அநியாயம் செய்தவராவீர். மறுபடி ஐக்கியத்தை உம்முடைய அல்லா(ஹ்) ஏற்படுத்துவா னென்பது உமக்குத் தெரியாது" (33 : 37).

தனது தீர்க்கதரிசியின் விஷயத்திலேயும் இவ்வித முறை மையைக் குர்ஆன் வாயிலாய் வெளியிட்டிருப்பதால் பொது ஜனங்களின் காரியத்தில் இது விஷயமாய்க் குர்ஆன் கொண் டிருக்கும் நோக்கம் எளிதே புலனகும். நபிக்கோர் உத்திரவு, பொது ஜனங்களுக்கோர் உத்தரவு என்ற நோக்கம் பற்றியல்ல. திருநபி அவர்களே குர்ஆனின் ஆக்ஞையை அப்படியே பின் பற்றி நடக்கும்படி வற்புறுத்தியும் தாங்களும் நடத்திக் காட் டியு மிருக்க இந்த விவாகரத்து விஷயத்தில் குறிப்பாய் எச்ச ரிக்கை செய்வதென்ருல் விவாகமென்பது இஸ்லாத்தில் எத் துணைப் புனிதமாக்கப்பட் டிருக்கிற தென்பது மறத்தற்பா லதன்று. விவாகரத்து இஸ்லாத்தால் புதினமாய்க் கொண்டு வரப்பட்ட முறையல்ல வென்றும், இது தொன்றுதொட்டுள்ள பழக்கமே என்றும் சிலர் கூறுவர். அங்ஙனமல்ல; விவாகம் செய்துகொள்வதில் ஒரு மனிதனுக்கு எத்துணைப் பாத்திய முண்டோ அஃதேபோலவே புருஷன் பிரியத்துக்கு எக்கா லத்திலும் எந்நிலையிலும் காரண அவசியமின்றித் தன் மனே பீஷ்டப்படி விவாகக்கட்டை ஒழிக்கலா மென்று எண்ணி

அப்படியே பல தேசத்தவரும் பின்பற்றி வந்தனர். இன்னம் சில மார்க்கமோ, வகுப்போ இதற்கு (ரத்துக்கு) இடந்தரவில்லை. இதைத்தான் இஸ்லாம் திருத்தியமைத்தது. திருநபி அவர்கள் தோன்றிய காலத்தில் யாதொரு வரையின்றி ஒரு சார்பாய்ப் பின்பற்றிவந்த வழக்கத்தை ஆரம்பத்தில் வரையறுத்து அதன்பின் தம்பதிகள் இருவருக்கும் பாத்தியம் அளித்தும் இதற்கப்பால் இதைக் கையாளாமலிருக்கப் போதனைகளை நிறுவியும் இவ்விதமாய்ப் படிப்படியாய்ச் சீர்திருத்தத்தை உட்புகுத்தித் தந்தது. "அஷ்பா வன்னஜீர்" என்னும் நூலில் இதன் ஆசிரியர் இஸ்லாமிய மணவாழ்க்கையைச் சுருக்கிச் சொல்வதைக் கவனியுங்கள்: அதாவது "சமூகத்தைப் பாதுகாப்பான் வேண்டியும், துர்நடத்தை வியபிசாரம் இவைகளினின்றும் மக்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்ளுவான் வேண்டியும் அமைக்கப்பட்ட ஒரு ஸ்தாபனமே விவாகமாகும். விவாகத்தை ஒரு உடன்படிக்கையாய்ப் பாவித்துப் பின்பற்றினல் பரஸ்பர சம்மதத்தின் பேரில் ஸ்திரீ புருஷர் இருவருக் கிடையில் ஒரு பந்தத்துவம் தோன்றிவிடும்."

## சொத்துரிமை

எச்சமூகத்திலும் தரப்படாத இவ்வுரிமையை நியாயமான முறையில் இஸ்லாம் வகுத்து அமைத்திருக்கின்றது. திருக் குர்ஆன் இவ்விதியை உலகுக்கு வெளியிட்ட காலத்தில் பிற வகுப்பாரிடத்து எத்தேசத்திலும் இத்தாராள மிருந்ததாய்த் தேசசரித்திரம் காண்பிக்கவில்லை. இதற்குப் பிறகே ஒவ்வொரு வகுப்பாரும் நாகரிக முதிர்ச்சியால் தம் தம் சமூக

ரீதிக்குக் கூட்டியும் திருத்தியும் குறைத்தும் ஒழித்தும் அனுஷ்டித்து வருகின்றனர்.

"நங்கள் குழந்தைகள் விஷயத்தில் அல்லா(ஹ்)வின் கட்டளையாவது: இரண்டு பெண்களுக்குச் சமமானதை ஒரு ஆண் அடைவானாக! இரண்டிற்கும் அதிகமான பெண்ணிருந்தால் இறந்தவர் விட்டுப் போனதில் மூன்றில் இரண்டை இவர்கள் அடைவார்களாக; ஒருத்தியானால் பாதியை அடைவாளாக; பிள்ளை இருக்க ஒருவன் இறந்தால் அவனின் சொத்தில் பெற்றோர் ஒவ்வொருவரும் ஆறில் ஒன்றை அடைவாராக! அவனுக்குப் பிள்ளை இல்லையானால் பெற்றோரே அடைவாராக. இதில் தாய் மூன்றில் ஒன்றையும் சகோதரர்களிருந்தால் தாயானவள் ஆறில் ஒன்றையும் அடைவாளாக!" (குர்ஆன் 4: 11).

"பிள்ளை யில்லாவிட்டால் உன் மனையாளின் சொத்தில் நீ (புருஷன்) பாதி யடைவாயாக. பிள்ளை யிருந்தால் நாலில் ஒன்றை யடைவாயாக!.........பிள்ளை யில்லாது நீ(புருஷன்) இறந்தால் மனைவி நாலில் ஒன்றும், பிள்ளை இருந்தால் எட்டில் ஒன்றும் அடைவாளாக; பெற்றோர் அல்லது குழந்தை இல்லாது நீ (இருபாலாரும்) இறந்தால் நுங்கள் சோதர, சோதரிகள் ஒவ்வொருவரும் ஆறில் ஒன்று வீதம் அடைய வேண்டியது. இவர்கள் இதற்கு அதிகப்பட்டிருந்தால் மூன்றில் ஒன்றைப் பங்கிட்டுக் கொள்வார்களாக!" (4:12).

"சட்டத்தின் தீர்மானத்தைப் பொறுத்து உம்மை அவர்கள் கேட்கிறார்கள்; பெற்றோர்களோ அல்லது பிள்ளைகளோ இல்லாது ஒரு மனிதன் இறந்தால் அவனைப்பொறுத்து

அல்லா(ஹ்) இடும் தீர்மானமாவது அவனுக்கு ஒரு சோதரி இருந்தால் அவள் பாதியை அடைவாளாக! அவளுக்குப் பிள்ளை யில்லையானால் சகோதரன் அவளின் வாரிசாகிறான். இரண்டு சோதரிகளிருந்தால் அவன் சொத்தில் மூன்றில் இரண்டைப் பெறுவார்களாக!" (4: 177).

இங்குச்சில மட்டில் குறிப்பாக எடுத்துக் காட்டப் பட்டன. இதைச் சார்ந்த உட்பிரிவுகளை எல்லாம் விரிப்ப தற்கு இங்குப் பொருந்தாது. இச்சிறு நூலின் கருத்துக்கு இவைகள் போதும். இவைகளை நோக்குங்கால் ஸ்திரீகள் பலவித நிலைமையிலும் முறைமையிலும் அந்தஸ்திலும் அடையவேண்டிய பாகமும் உரிமையும் வரையறுக்கப்பட் டிருப்பது எளிதே புலனாகும். சாதாரண பாமர மக்களும் விளங்கிக்கொள்ளும் வகையில் மானிட இயற்கை அமைப்பை யொட்டி இப்பாத்தியம் வகுக்கப்பட்டிருப்பதே குர்ஆனின் உண்மையை நிரூபித்து நிற்கின்றது. நாகரிக முதிர்ச்சியில் லாத காலமாம் 1400வருடங்களுக்கு முன்னேயே எவ்வகுப்பா ரிடத்தும் அனுஷ்டான மில்லா முறையைப் பகுத்தறிவுக்குப் பொருந்தஎவ்விதப்பொருத்தமாய் அமைத்துள்ளது! என்னே! இஸ்லாத்தில் மகளிருக்குத் தரப்பட்ட உயர்ந்த அந்தஸ்தும் உரிமையும்!

இத் திட்டத்தில் அமைந்து கிடக்கும் விசித்திர ரகசி யத்தை ஜனங்கள் நோட்டமிடுவரேயானால் ஸ்தூலத்தில் மறைமுகமாய் இயற்கையில் அமைந்துள்ள உதிர விகிதாசாரம் உலக இல்லற வாழ்க்கையின் உரிமையிலும் பொருத்தமாக்கப் பட்டுப் பிரதிபிம்பிப்பதைக் காண்பார்கள். என்னே! இத்

துணை நுட்பமாய் எல்லாத் துறையிலும் இயற்கைக்கு முற்றும் பொருத்தமாய்ச் சட்டதிட்டங்களை அமைத்து இஸ்லாம் தந்திருப்பது! இதன் உண்மையாம் உன்னத ஸ்தானத்துக்கும் தெய்விகத் தன்மைக்கும் இவை பெரும் சான்றுகளல்லவோ? பொறுமை என்ற கண்ணாடியால் மூடப்படாத கண்ணாலும் அஞ்ஞானமென்ற இருளால் தழுவப்படாத மனத்தாலு மல்லவா இதைத்தீர நோட்டமிடல் வேண்டும்? எல்லாத் துறைகளிலும் ஸ்திரீகளுக்கு இவ்வித உன்னத உரிமையையும் பாத்தியதையையும் எந்த மதமும் தரவில்லை என்றே கூறல் வேண்டும். இதைக் காப்பி அடித்துச் சீர் திருத்திக் கொண்டு, எங்களிடமும் இதற்குச் சற்றுங்கூடக் குறைய ஒப்பான சுயேச்சையும், மதிப்பும் அந்தஸ்தும் உண்டு என்று கூற முன் வருவதை யாம் பாராட்ட முடியாது. அசலாய், வேதவாயிலாய், இவ்விதப் பரிகாரம் பிற சமூகத்தவரிடம் உண்டா என்பதே எமது கேள்வி. அரசாங்கத்தார் ஆதரவின் கீழ்ப் பொதுஜன அபிப்பிராயத்தால் தையாரிக்கப் பட்ட யாதாஸ்தை மதம் தந்துள்ள உரிமை என்று கொள்ளல் முடியாது. அரசாங்கத்தார் திட்டத்துக்கும் ஆண்டகையின் கட்டளைக்கும் பாரிய வித்தியாசம் உண்டென்பதை எவரும் மறுத்தல் கூடாது. அரசாங்கத்திட்டம் கால ரீதிக்கு வேண்டிய அளவாய் மாறிக் கொண்டேபோகும். ஆண்டகையின் கட்டளை எல்லாக் காலத்திற்கும் எல்லா நிலைமைக்கும் எல்லா வகுப்பாருக்கும் எல்லாத் தேசத்திற்கும் பொருத்த முற்று இருக்கும். இவ்வித ஸ்திரமான வாய்மை பெற்றிருக்கும் பெருமை எமது இஸ்லாத்திற்கே உரியது.

ஸ்திரீகளின் பாகத்துவத்தை நிரூபிக்க வேண்டியவிடத்தில் இவ்வளவு அதிகம் எழுதவேண்டி நேரிட்டதற்குக் காரணம் இஸ்லாம் அமைத்துள்ள திட்டத்தின் அழகேயாம். ஆண் பாலரைப்போல் பெண்பாலரிடத்தும் தாய், மகள், சகோதரி, மனைவி என்ற இம்மூன்று வகுப்பாருமே பிரதமஸ்திரீ பந்துக்களாவர். ஆனதால் இவர்களின் வாரிசு பாத்தியமும் தெளிவாய் மேலே எடுத்துக் காட்டியுள்ள குர்ஆன் வாக்கியங்களால் திட்டப்படுத்தப் பட்டுள்ளன. இதுவே இஸ்லாத்தில் ஸ்திரீகளுக்கு அளிக்கப்பட்டிருக்கும் சொத்துரிமையைப் பற்றி விளக்கிக் காட்டுவதற்குப் போதுமானதா யிருக்கின்ற தென நம்புகிறேன்.

ஸ்திரீகள் அடைந்த சொத்தை ஏக சுதந்தரத்துடனும் உரிமையுடனும் அவர்கள் இஷ்டப்படி பராதீனம் செய்ய இஸ்லாமியச் சட்டங்கள் அதிகாரம் அளிக்கின்றன. ஏனையோரிற் சில ஸ்திரீகளுக்கு ஏதோ சில முரணான பாத்தியம் கொடுக்கப்பட் டிருந்த போதிலும் அவர்களுக்கு ஏக சொந்தமாய் ஆக்கப்படவில்லை. அவரவரின் வாரிசுகள் அடைவதற்கும் பராதீனம் பண்ணுவதற்கும் உரிமை கொடுக்கப்படவில்லை. என்னே! சுயேச்சையற்ற பொய்யான சுதந்தரம்! இஸ்லாத்தின் பூரண சுதந்தரத்துக்கும் சுயேச்சையிழந்த சுதந்தரத்திற்கு முள்ள வித்தியாசத்தையும் நியாய வழுவையும் உரிமையின் முரண்பாட்டையும் கவனியுங்கள்!

## சுயேச்சை

ஏனைய துறையைப்போல் இத்துறையிலும் ஸ்திரீகளுக்கு உயர்வையும் பூரணத்தையுமே இஸ்லாம் ஸ்தாபித்துள்ளது.

“ நுங்களில் மற்றவரைப் பார்க்கிலும் சிலர் மேன்மை யாக்கப்பட் டிருப்பதைப் பற்றி நீ பொறுமை கொள்ளாதே. தாங்கள் சம்பாதிப்பதையே ஆடவரும், தாங்கள் சம்பாதிப் பதையே ஸ்திரீகளும் அடைவார்களாக; அல்லா(ஹ்)வின் தயவைக் கோருவாயாக! நிச்சயமாக அல்லா(ஹ்) எல்லாக் காரியத்தையும் அறிந்தவனாக இருக்கிறான்” (4 : 32).

இவ் வாக்கியங்களால் அவரவர் பொருள் அவரவருக்கே உரித்தான தென்பது வெளிப்படை. சிறுமியானாலும், கன் னிகையானாலும், விவாகமானவளானாலும், விதவையானாலும், பிரத்தியேகமாய்ச் சொத்தையோ, பொருளையோ, சொந்த மாய்ப் பெற்று அனுபவிக்க ஸ்திரீகளுக்குச் சுதந்திரம் உண் டாக்கிக் கொடுக்கப்பட் டிருக்கின்றது. ஆடவர் விஷயத் திலும் அப்படியே. ஆடவர் மகளிரின் சொத்துக்கோ, பொருளுக்கோ அநியாயமாய் ஆசிக்கக் கூடாது. விவாக மாகாத அல்லது விதவையானவளின் சொத்தைச் சொந்தக் காரன் பாதுகாத்துக்கொடுக்க வேண்டும். புருஷனை யுடையவளானால் அவனே இதை நடத்தல் வேண்டும். விவாக முறிவு ஏற்பட்டுவிட்டாலுங்கூட ஆண் குழந்தை யானால் ஏழு வயது வரையிலும் பெண்ணானால் ருதுவாகும் வரையிலும் தன்னுடைய பாதுகாப்பில் பிள்ளைகளை வைத் துக் கொள்ள ஸ்திரீகளுக்கு இஸ்லாம் உரிமை அளிக்கின்றது. தம்பதிகளின் அந்தஸ்துக்குப் பொருந்த ஜீவனாம்சமும் இட மும் கொடுக்கும்படி கேட்கவும் மனைவிக்கும் உரிமை உண்டு. பல மனைவிகளை உடையவனானால் ஒவ்வொருவரையும் ஏனைய வருடன் சமமாய் நடத்த வேண்டுமென்று புருஷனைக் கேட்

கவும் இஸ்லாத்தில் சுதந்தரமுண்டு.

சில சமூகச் சகோதரிகள் தங்கள் விவாகத்தோடு சுதந்தரத்தை இழந்து தாங்களும் தங்கள் பொருளும் சொத்தும் புருடனுடையதாய்விடுவது மல்லாது, தனியே சொத்தையோ பொருளேயோ பெற்றிருக்க உரிமையற்றவர்களாயு மாகிவிடுகின்றனர். இங்குப் பிரஜா உரிமை நசுக்கப்பட்டுப் போய்விடுகின்றது. இக்காலமோ உரிமை, சுயேச்சை, இவைகளைத் தேடும் காலமா யிருக்கின்றது. நாகரிகமே இவ்வழியைத் தந்திருக்கின்றது. இஸ்லாம் எத்தனையோ நூற்றுண்டுக்கு முன் இச்சுதந்தரத்தை நிறுவி ஸ்தாபித்துள்ளது. என்னே! இஸ்லாத்தின் முன்னேக்கம்! சர்வ சமயமென்று இதை அழைப்பதற்கு ஏன் மறுக்கின்றீர்கள்? அறிவையும் கல்வியின் பயனையும் காட்டுங்கள்! இவைகளை உண்மையில் பிரயோகித்தால் இஸ்லாத்தை ஆதரிக்க ஏனைய சகோதரிகள் போட்டியிட்டு முன் வருவாரென்பது உண்மை. மனைவியானவள் தன் புருஷனுக்கு மனைவியாகவும், மந்திரியாகவும், துணைவியாகவும், பங்காளியாகவும், வைத்தினியாகவும், தோழியாகவும் இருத்தலே இல்லறவாழ்க்கைக்குச் சிறந்த ஆபரணமென்ற நீதியை ஸ்தாபிப்பதற்கு இஸ்லாமியத் திட்டமே ஆற்றல் உடையது.

## மஹர்

இது வேறு எந்த மதத்திலும் சமூகத்திலும் அனுஷ்டிக்கப்படாத பிரத்தியேக இஸ்லாமிய மனைவியின் கௌரவ சுதந்தரமாகும். இது ஸ்திரீதனம் (Dowry) அல்ல. பணமாகவோ,

சொத்தாகவோ, அல்லது வேறு பொருளாகவோ மனைவிக்குப் புருஷனால் கொடுக்கப்பட வேண்டிய ஒரு கடமையான சன்மானமாகும். விவாககாலத்தில் இதைத் திட்டப்படுத்தி வாக்குறுதி செய்யப்படல் வேண்டும். இதைப் புருஷன் ஏற்றுக் கொண்டா லொழிய விவாகம் பூரணமடையாது. அவன் வாழ்க்கையில் இதுவே முதல் கடனாகும். இதை ஏற்றுக் கொள்ளாத விவாகம் இஸ்லாத்தில் அங்கீகரிக்கப் படவில்லை. விவாக காலத்திலேயே இதை மனைவிக்குச் செலுத்தப் புருஷன் கடமைப்பட்டவ னாகிவிடுகிறான். எந்த வாரிசும் இந்தக் கடனைப் பிற்படுத்தவோ நிராகரிக்கவோ முடியாது. இதைச் செலுத்திவிட்டுத்தான் வாரிசுகள் (மனைவி உட்பட) சொத்தை யடையவேண்டும். ஏற்றுக்கொண்ட க்ஷணமே புருஷன் இக் கடனைச் செலுத்திவிடுவது விதியாக்கப்பட் டிருக்கிறது என்றால், இதன் சுதந்தரம் எத்துணைப் பிரதானமாக்கப்பட் டிருக்கிறது என்பதை உணர்வீர்கள்! மனைவியின் பிற்கால வாழ்விற்கு ஆதாரமாயும் மூலதனமாயும் இஃது அமைக்கப்பட் டிருக்கிறது என்றால், ஸ்திரீகளின் நிலைமையை இஸ்லாம் எவ்வளவு நுட்பமாய்க் கண்காணிக்கிறது என்பதைத் தெரிந்துக் கொள்வீர்கள். புருடன், பெற்றோர்கள், பிள்ளைகள் இன்னம் இதர சுற்றத்தார்கள், சகோதரன், மகன், பிற ஆண் மக்கள் இவர்களிடத்தும் இவர்கள் முன்னிலும் ஸ்திரீகள் எவ்விதம் நடந்துகொள்ள வேண்டுமென்ற நீதிகள் இஸ்லாமிய நூல்களில் வரையறுத்துத் தெளிவாய்க் கட்டளையிடப்பட் டிருக்கின்றன. ஸ்திரீகளின் கல்வி விஷயம் பிரதானமாய் வற்புறுத்தப்பட் டிருக்கின்றது. முஸ்லிம் சகோதரிகளுக்குக்

கல்வி புணர்வு தடுக்கப்பட் டிருக்கின்றது எனச் சிலர் கூறு வது தவறேயாகும். மக்களிடத்து அறிவை வளர்த்துச் சமத்து வம் சுயேச்சை, சுதந்தரம், இவைகளை நிறுவத்தோன்றிய இஸ்லாம் இவைகளுக்குப் பிரதானமான கல்வியை ஸ்திரீகள் பெறக்கூடாது என்று தடுக்குமா? இது வீண்பழியே. உலக சரிதைகளும் முஸ்லிம் சரித்திரங்களும் இப் பழியை ஒப்புக் கொள்ளவில்லை. ஞானத்துறையிலும், ராஜீயத்துறை யிலும், சமூக சேவகத்திலும் முஸ்லிம் சகோதரிகள் தலை சிறந்து விளங்குவது போலவே கல்வித்துறையிலும் உன்னத நிலைமை யடைந்திருந்தனர். திருநபி அவர்களின் புத்திரி களில் திருபாத்துமா(ரலி) அவர்களின் விசேஷ குணமும், தெய்வ பக்தியும், அறிவின் திறமும், உலகம் அறிந்த விஷயமே. "சுவன நாயகி" (காத்தூனே ஜன்னத்) என்ற உயரிய பட்டமும் இவருக்கே உலகத்தவரால் அளிக்கப்பட் டிருக்கின்றது. சக்கரவர்த்தினியாம் ஜுபைதா, கல்வியைப் பூரணமாய்ப் பெற்றுத் திறமையுடன் அரசு நடத்தியதும், சிறந்த கவியாய் விளங்கியதும், மக்காவில் இவர் பெயரால் நீர்ப்பாசனத்தை நிறுவியதும், சரித்திரப் பிரசித்த மல்லவோ? அராபிய ஸ்திரீகள் யுத்த வீரத்துடன் யுத்தத்தை நடத்தியதும், யுத்தங்களில் ஈடுபட்டு மதசேவகம், தேசிய சேவகம், புரிந்ததும் இன்னம் நம் முன்னில் நின்று நம் காலத் திய மகளிரை இகழவில்லையா? அப்பீல்கோர்ட் தலைவி யாயும், ராஜீயத் தூதர்களாயும் முஸ்லிம் சகோதரிகள் இருந் திருக்க வில்லையா? ஷேக்ஷீதாயும், ஜகம் நம்பும் சட்ட நிபுணர்களாகவும் போதகாசிரியைகளாயும் விளங்கவில்லையா?

நஜஹீன், ஹப்ஸா, மரியா, ஜகநம்பு, ஸபிய்யா இவர்கள் எல்லாம் கார்டோவா அல்லது கிரனடா கல்வி நிலயங்களில் தோன்றிய மாசற்ற முத்துக்களாம்.

ஸ்திரீகள் சம்மந்தப்பட்ட மட்டில் இவர்களின் கௌரவம், அந்தஸ்து, உரிமை, சுதந்தரம், சயேச்சை, சமத்துவம், வாழ்க்கை, ஆதரவு, இவைகளுக்காகப் பற்பல மதங்கள் இயற்றியுள்ள கட்டளை, திட்டம் இவைகளையும் பற்பல சமூகத்தவர் அனுஷ்டானங்களையும் இச்சிறிய நூலில் சுருக்கமாக நாம் பரிசீலனை செய்துவிட்டோம். இதில் தரப்பட்ட குறிப்புக்கள் ஆதாரவுகள் இவைகளைக் கொண்டு நடுநிலை நின்று சீர்தூக்கிப் பார்த்தால் இஸ்லாமே ஸ்திரீகளைப் பூரணமாக்கி, மேற் கூறப்பட்ட அம்சங்களை எல்லாம் இவர்களுக்குத் தருகின்ற தென்ற தெளிவான தீர்மான முண்டாகும்.

இஸ்லாத்தில் மகளிருக்கு யாதொரு அந்தஸ்து மில்லை என்பதையும் அடிமைகளைப் போலவும் பதுமைகளைப் போலவும் முஸ்லிம்களால் இவர்கள் பாவிக்கப்படுகின்றனர் என்பதையும் பொய்ப் பிரசாரத்தின் அர்த்தமற்ற பிதற்றுதல்கள் என்றும் இச்சிறு நூலில் விளக்கப்பெற்றது.

77147

முற்றிற்று.

Printed at the Guardian Press, Ltd., 158-B. Broadway, Madras—3/33.